தென்மொழி

தீதிலாது இனம் ஆற்றுவேன்!

தூய்மை யான,ஓர் உளத்தினை - ஒளி
துலக்க மான,ஓர் அறிவினை,
வாய்மை யான,ஓர் உணர்வினை - ஒரு
வளப்ப மானநன் னெறியினைச்
சேய்மை யான,ஓர் இயல்பினை - மிகச்
சிறந்த தான,ஓர் உயிரினை,
நோய்மை யானஇத் தமிழர்கள் - தொலை
நோக்கு வார்என நினைத்திலேன்!

காணு மாறொரு தாழ்வினை - அறக்
களையு மாறொரு கடமையை,
நாணு மாறொரு நேர்மையால் - அட,
நானும் நலிவுற ஆற்றினேன்!
வேணு மாறிவண் தமிழர்கள் - அதை
விளங்கி னாரெனக் கருதிலேன்!
பேணு வாரென நம்பிலேன்! - எனில்
பின்னும் அதனையே செய்குவேன்!

குற்றங் குறைகளும் சாற்றுவார்! - யான்
கூறும் கூற்றையும் மாற்றுவார்!
தொற்றும் மடமையில் உழலுவார்! - ஒரு
தோழமை உளம் அறிகிலார்!
கற்றும் கலாதவர் போலவே - பெருங்
கயமை செய்வரை நம்புவார்!
மற்றும் யான்எனச் செய்குவேன் - மன
மாசி லா(து)இனம் ஆற்றுவேன்!

உண்மை யிலாதவர் நம்புவார் - ஓர்
உண்மை உளத்தினை நம்பிலார்!
வெண்மை உரைகளைப் பற்றுவார் - தூய்
வெள்ளை நெஞ்சினை எற்றுவார்!
பெண்மை மனமென ஐயுற - ஒரு
பேதை போலெனைப் பேசுவார்!
திண்மை தவிர்ந்திடல் அல்லனாய் - ஒரு
தீதி லா(து)இனம் ஆற்றுவேன்!

நமக்கு வந்த மடல்கள்.

0: 984: தென்மொழிச் சான்றீர்! தென்மொழிச் சான்றீர்!
தொன்மொழி காக்கும் தென்மொழிச் சான்றீர்!
தங்களறிக்கை தளர்நடைக் குழவிகள்
தங்கால் எடுக்கையில் தட்டுதல் ஒத்ததே!

செக்கர் வானில் சீருற உடுக்கள்
மிக்கிருந் தாலும் மிளிர்வன இரண்டே!

நிலைத்திணை யுள்மலர் நிறப்பன சிலவே!
தலைப்பட நறுமை தருகனி தருஞ்சில!

மன்பதை பல்கினும் மாண்புளார் சிலரே!
தின்பதே தொழிலாய்த் திரிந்து (உ)ழன்றிடும்
மக்கள் நடுவில், எழுத்து வணிகம்
தக்கவா றுற்றித் தமிழின மொழியிடை,
ஒட்டுண் ணியென ஓங்கு தாளிகைகள்
மட்டிலா தெழுந்து மகிழுலா வரினும்,
உலகினில் தமிழனை, ஒண்டமிழ் மொழியினை
நிலைக்கச் செய்ய நிலையாய் வளர்சீர்
'தென்மொழி' பாடும் 'சிட்டி'யைப் போன்றித்
தொன்மொழிப் பாரோர் துளங்கக் கிடைக்குமா?

வெண்ணெய் எடுத்திடத் தாழி உடைப்பதா?
எண்ண மறியநெஞ் சாங்குலை ஈர்ப்பதா?

கருநிலை யில்சினை கலக்க லாகுமா?
அருள்நிறை தாயழித் தருங்குழவி காப்பதா?

எப்படி மாற்றி எவ்வகை ஏற்புரை
செப்பினும் தமிழுளம் ஒப்புமோ கூறீர்!

'சிட்டும்' 'தென்மொழி' மட்டு மல்லாது
எட்டும் 'தமிழ்நிலம்' என்று புரந்திட
வேண்டுகோள் என்றிதை விடுத்தேன்
ஈண்டினம் அழிக்கும் இழிவழித் திடவே!

— பாவலர் தமிழியக்கன், புதுவை-5

0: 985: அன்பார்ந்த ஐயா, வணக்கம். நாள்தோறும் தென்மொழியின் வருகையை எதிர்நோக்கி அஞ்சலக அலுவலரின் வருகைக்காக வழி மீது விழிவைத்துக் காத்திருந்தேன். தென்மொழிப் பட்டறையின் செயல்பாட்டுக்கு, மின்தடங்கல் போல் ஏதேனும் தடங்கல் ஏற்பட்டுள்ளது- என எனது நெஞ்சம் எண்ணியது. தென்மொழியைச் சின்னாள்கட்குமட்டும் நிறுத்தி விட்டீர்களோ... என்றுகூட எண்ணினேன். தென்மொழி சுவடி, 12 ஓலை 7 கைகளிலேற்றேன்.

'முடிவு உங்கள் கைகளில்' என்ற தலைப்புத் தாங்கிய பகுதியையும் கண்டேன்: திரைப்படம், திரைப்பட நடிகர், நடிகையரையே நெஞ்சில் நிறுத்தி ஏக்கமுறும் நிலை அங்குமட்டுமா? இங்கும், எங்கும், எல்லா ஊர்ப்புறங்களிலுந்தான் நீக்கமற நிறைந்துள்ளன. திரைப்படம் தொடர்பான செயல்களையே

—(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்)

''கெஞ்சுவதில்லே பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லே; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லே;'' எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லே உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்ருக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல் களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடி யாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுருது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடு பட வேண்டுமானுல், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனர்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனர், தென்மொழி, ப. துரையரசன். தென்மொழி நா. இளமாறன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 20] உ௦கரு சுறவம் சன-பிப்ர 84' [ஓலை. 3-4

என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்-5

'தென்மொழி' தொடங்கிய நாளிலிருந்து இதனை வரவேற்றவர்கள் பலரிருந்தாலும், இதனை வீழ்த்த முனைந்தவர்களும் ஒரு சிலர் இருந்திருக்கிருர்கள். இதை நிறுத்து வதில் அவர்களுக்குத் துளி ஊதியமும் இல்லையென்ருலும், இது தொடர்ந்து நடப்பதில் அவர்களுக்கு ஏனே பொறுத்துக்கொள்ள முடியாத ஒரு வெறுப்பு? ஒரு பொருமை இருந்துவந்திருக்கிறது; இன்றும் இருந்து வருகிறது

என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த வெறுப்பும் பொறாமை யும் உண்மையாகவே 'தென்மொழி' மேல் ஏற்பட்டதல்ல. என் மேல் ஏற்பட்டவை. அதுவும் சிலர்க்கு என்மேல் உள்ள வெறுப்பு கொஞ்ச நஞ்சம் என்று சொல்ல முடியாது. நான் இல்லாமலே போய்விட வேண்டும் என்று, ஒருநாளின் முழுப்பொழுதும் எண்ணிக் கொண்டிருக்கும் நெஞ்சங்களும் உண்டு. ஆனல் அவ்வாறு ஆழ எண்ணுபவர்கள் ஓர் ஐந்தாறு பேர்களே! வேறு ஐந்தாறு பேர்கள் என்மேல் வெறுப்பும் பொறாமையும் கொண்ட வர்களாயிருப்பினும், நான் ஒழிந்துபோக வேண்டும் என்று எண்ணும் அளவுக்கு அவ்வளவு கொடியவர்களல்லர். தங்களுக்கு ஏதோ சிலவகையில் நான் உதவியாக இருக்கவில்லையே என்னும் மனக்குறை அந்த இரண்டாம் நிலையினர்க்கு உண்டு! காலப் போக்கில் அவர்கள் முன்போல் ஒத்தும் வரலாம்; ஒத்து வராமலும் போகலாம்.

ஆனல், தென்மொழி மேல் அன்பும் அக்கறையும் கொண்ட பல்லாயிரக்கணக்கான அன்பர்களுள் இந்த ஓர் ஐந்தாறு பேர் களைப் பற்றி மட்டும் நான் ஏன் இத்துணை அளவு விளத்தப் படுத்த வேண்டும்? அவர்களுக்கு ஏன் என்மேல் வெறுப்பும் பொறாமையும் ஏற்பட்டன. அவ்வாறு ஏற்படாமல் ஏன் நான் செய்துகொள்ளவில்லை; என்றெல்லாம் பொதுவாக எண்ணவும் இடம் உண்டு. ஆனல், இந்த வெறுப்பும், பொறாமையும் கொண் டவர்கள் வெளிப்படையாக அந்த உணர்வுகளைச் செலுத்துபவர்க ளல்லர். இப்பொழுது பார்த்தாலும் அவர்களின் முகத்தில் தோன்றும் புன்முறுவலும், அவர்களின் குனிவும் பணிவும் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் வியப்பையும் மலைப்பையும் உண்டாக்கி, அவர்கள் மேல் ஒரு சிறு ஐயமும் தோன்றாதவாறு செய்வன. எனவே பொதுவாகவே அவர்கள் யார் யார் என்று பிறர் அறிந்து கொள்வதே அரிது. என்பால் அவர்களைவிட நெருங்கிய தொடர்பும் அன்பும் வைத்திருப்பவர்களே அவர்களை ஒருவாறு அறிவர். அந்த அளவுக்கு அவர்கள் மறைந்து ஒழுகு பவர்கள். இத்தனைக்கும் அவர்கள் பார்ப்பனர்கள் அல்லர். அவர்களையே நல்லவர்களாக ஆக்கிவிடும் தூய தமிழர்கள்தாம்! இனி, பொதுவாழ்வில் உள்ளவர்கள் இத்தகையவர்கள் பற்றி யெல்லாம் கவலைப்படவே தேவையில்லை என்பது எனக்குத் தெரியாமல் இல்லை. நானும் கவலைப்பட்டு இதை எழுதவில்லை. ஆனல், அவர்கள் செய்கின்ற முயற்சிகள் எனக்கன்று, நம் 'தென்மொழி'த் தொண்டுக்குத் தடைகளாக இருக்கின்றன என்பதால் சொல்ல வேண்டியுள்ளது. இவ்வளவு நாள்கள் நான் அவற்றை வெளியே இந்த அளவுக்கு நேரிடையாகச் சொன்ன தில்லை. தென்மொழியின் இயக்கம் பற்றி எழுதுகின்ற இவ் வேளையிலாகிலும் அதை நினைவுகூறும் தேவை வந்ததால், இதனை இங்குப் புலப்படுத்துகின்றேன். இல்லெனில் என் அகத்திலேயே மடிய வேண்டியவை இவை.

அந்த ஓர் ஐந்தாறு பேர்களும் நல்ல செல்வர்கள்! அவர் களுள் ஒருவர் தென்மொழிக்குக் கடந்த சில ஆண்டுகளாக

மிகவும் தோன்றாத் துணையாகநின்று ஒருசில ஆக்கங்கள் செய்தவர்; ஆனால், ஏனோ தெரியவில்லை; அவர்க்கு வந்த மனவியல் அதிர்ச்சி என்னவோ தெரியவில்லை; ஓயாமல், ஒரு நாள் விடாமல், நம்மைப் பற்றியே தாறுமாறாக, ஊர்—உலகில் உள்ள முகவரிகள் தெரிந்த அனைத்து அன்பர்களுக்கும், இழிவாகவும் பழியாகவும், எரிச்சலாக வும் கரிச்சலாகவும்—வண்ண வண்ண எழுது கோல்களை வைத்துக் கொண்டு, சொல்லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து அவற்றை மாற்றி மாற்றிப் பயன்படுத்தியும், கரும்புள்ளிகள் செம்புள்ளிகள் குத்தியும், மஞ்சள் கோடுகள் நீலக் கோடுகள் இட்டும்—இன்ன பிறவாறும்—எழுதி எழுதித் தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருக்கிறார். அவர் என்ன எழுதுகிறார் என்பதை எவருமே விளங்கிக் கொள்ள வியலாது தமிழிலும் சில நேரங்கள் ஆங்கிலத் திலும் அவர் எழுதும் மலைப்பூட்டும் வியப்பூட்டும், அருவருப் பூட்டும் செய்திகள் பலபேரைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய பூசல்களாலும் பிறதடைகளாலும் நெருக்குண்டு, தென்மொழி தட்டுத் தடுமாறி வெளிவர வேண்டியுள்ளது. இந்த நிலைகளை இவ்வளவு வெளிப்படையாக எழுதுவதைக்கூட, அந்த (!) ஐரோப்பிய ஒட்டுண்ணிப் பேரா(சை ஆ)சிரியர் போல் சிலர், அன்பர்களிடம் இதையெல்லாம் கூறி இவா நன்கொடை திரட்டத் தான் எழுதுகிறார் - என்று தழுக்கடித்துத் திரிகின்றனர். ஆக்கி வைத்த சோற்றில் எச்சில் துப்புகிற இத்தகைய இழிஞர்களுக் கிடையிலும், கருத்துப் பகைவர்களுக்கிடையிலும் சிறுசிறு கருவிகளை வைத்துக் கொண்டு, இத்தகைய பெரும் பணியை நிறை வேற்றுவதென்பது; தூண் முறிகிறதென்று துடைப்பத்தை முட்டுக் கொடுக்க முனைவது போலும் கொடுங் கடினமான செயலாகும்.

எனவே 'தென்மொழி' எவ்வகையானும். மாதம் மாதம் தொடர்ந்து வெளிவர வேண்டுமானால் நிறைய கருவிகளும், முழு நேரத் தொண்டர்களும் தேவை. இவர்களைத் தேடிக்கொண்டி ருக்கும் முயற்சி, நம் இயக்கத்திற்கும், தமிழ்நில வெளியீட்டுக்கும் மிகமிகச் சுமையாகவும் தொல்லையாகவும் போய் விடும் என்பதே என் பெருங் கவலை. இதைத் தொடர்ந்து வெளிவரச் செய்வது மட்டுமன்று; மிகவும் எடுப்பாகவும், கவர்ச்சியாகவும் (வடிவக் கவர்ச்சியன்று; வண்ணமும் எண்ணமும் கலந்த இயல்பான கலைக் கவர்ச்சியாக) வெளியிடுவது இயல்வதே! ஆனால் தொகை ஏராளமாக வேண்டுமே! - அதற்கு என்ன செய்வது? அதற்கு அரசோ, பெருத்த செல்வர்கள் ஓரிருவரோ தாம் துணையிருக்க இயலும். அன்பர்களிடையே அதற்கென நன்கொடை திரட்டுவ தென்றால், இலக்கக் கணக்கில், கோடிக் கணக்கில் திரட்ட வேண்டும். இந்நிலை இயல்கின்ற செயலாக எனக்குப் படவில்லை. கடன் பெற்றுச் செய்யலாம் என்றாலோ, ஏற்கனவே பட்டுள்ள கடன்கள் இடுப்பை முறிக்கின்றன; நெஞ்சைப் பிசைகின்றன. நித்தலும் நினைவூட்டுகளாக அச்சுறுத்துகின்றன. என் செய்வேன்?

பலபேர் பல திட்டங்களைச் சொல்லுகிறார்கள். திட்டங்கள் நமக்குத் தெரியும். செயல் படுத்துவது யார்? கடந்த 30 ஆண்டுகளாக இம் மண்ணுக்கு உழைத்ததை ஒரு குப்பை மேட்டிற்கு உழைத்திருந்தாலும், அதில் குன்றிமணிகளாகிலும் விளைந்திருக்கும். ஏதுங்கெட்ட எந்தமிழ் இனத்திற்கு உழைத்து, நொந்துளம் வருந்த வேண்டியுள்ளது!

முகமன் கூறிப் பாராட்டிப் பல்லிளித்துப் பணம் சம்பாதிக்கவும் நமக்குத் தெரியவில்லை. அதையும் இதையும் கூறிப் பொது மக்களிடம் பணம் பறிக்கவும் நமக்கு விருப்பமில்லை. எந்தக் கட்சியோடாகிலும் தொடர்பு, தோழமை என்று கூறி நடிக்கவும் நமக்குத் தெரியாது. இல்லை, அரசு, அமைச்சு என்று அடிப் படுக்கவும் இயலாது. இந்த நிலையில் எப்படி ஆக்கங்கள் வரும்? எனவே இரண்டு, மூன்று என்று இதழ்கள் நடத்தி இருளுள் மூழ்கிப் போவதை விட, 'தமிழ் நிலம்' ஒன்றை மட்டும் நடத்தி, ஓரளவு நிலைநிற்கலாம் என்னும் நல்லெண்ணத்தில்தான், தென்மொழி, தமிழ்ச்சிட்டை நிறுத்தும் முடிவுக்கு நான் வந்தேன்.

ஆனால், அன்பர்கள் மிகவும் வருந்தியும் 'நொந்தும்' வாய் விட்டு அரற்றியும், 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' இதழ்களை நிறுத்த வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்த வண்ணமாயிருக்கின்றனர் அவர்களின் மனங் கசிந்த அன்புரைகளாலும், உள்ளம் உருக்கும்தென்புரைகளாலும் உயிருவகை கொள்கின்றேன். ஆனால், உண்மையான விளைவுக்கு அவை உதவுமா? எவராகிலும் செலவர்கள் தென்மொழியின் முழுப் பொறுப்பையும் தாமே எடுத்துக் கொண்டு, சிறப்புடன் இதை நடத்த முன் வருவார்களானால், எத்துணை மகிழ்ச்சியடைவேன்? நானேஎன் மறைவுவரை இதற்குறு துணையாக இருந்து இதனை நடத்திக் கொடுப்பேனே! ஓரளவு சம்பளமாக எனக்குக் கொடுத்தாலும் போதுமே! அவ்வாறு எவராகிலும் முன் வந்தால் நல்லதுதான்! இல்லா விட்டால் என்ன செய்வது? அது பற்றிக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டியது தான்!

அன்பர்கள் சிலர் வாணாள் உறுப்பினர்கள் திரட்டி நடத்தலாம் என்று கருத்தறிவித்திருக்கின்றனர். நான் மேலே சொன்ன முழு முயற்சி தவிர, வேறு எந்த முயற்சியானாலும், இதழ் இப்படித்தான், செத்தவன் மூக்கைக்கூட அறுக்க உதவாத கத்தி போல, மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கும். தமிழையும் தமிழினத்தையும் எதிரிகளும் இரண்டகர்களும் முற்ற அழித்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பது என்று முனைந்திருக்கும் இவ் வேளையில், நம் முயற்சி, புயலுக்கு முன்னால் நீட்டிய பொத்தல் குடை போல் வலிவிழந்து மெலிவடைந்து வாழ்க்கையை இழக்க



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ௫௪

கவுள்நனை வேழம் கணைபட் டாங்கு
செயிர்வுமே லோங்கிய கல்விச் செவ்வியர்
ஒருதலை மாமணி உகுத்தோன் பெயர்ந்த
மனைமுகத் தவன்றனி ஈட்டங் குவித்து
முழங்கு விறற்பறை முருக மூட்டும்
அழற்போல் வெவ்வெரி அடரக் கொளுத்திய
காட்சி கண்டோர் தமிழ்கண் டோரே
பூட்கை அறிந்தோர் தமிழறிந் தோரே!
பொன்றிய தமிழ்ச்சீர் புதுக்கி மலர்த்தும்
மாணவர் அறவினை மகிழார்
கோணை அரசியல் கொள்கையி னோரே!

பொழிப்புரை :

கசிகின்ற மதநீரால் கதுப்பு (கன்னம்) நனையப் பெற்ற ஆண் யானை, எய்த அம்பினாலும் குத்துப்பட்ட விடத்து, அடங்காச் சினம் மேலெழும் தன்மையில், (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதுதான்! பின் என்னதான் செய்ய முடியும் என்று எரிச்சலாகக் கேட்கத் தோன்றுகிற தன்றோ, உங்களுக்கு!?

அது பற்றி, இறுதியாக, ஒரு முடிவை அடுத்த இதழில் கூறி விடுகிறேன். நெடு நாளைக்கு இவ்வுணர்வை நீட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை; எனக்கும் இஃது, ஏதோ ஒரு கல்போல் நெஞ்சில் கனத்துக் கொண்டுகிடக்கிறது! ஏதோ ஒன்று செய்ய வேண்டும்; துடிக்கின்றேன். யாருடனும் - அவர்களின் பொய்யும், புளுகும், போலித் தனமும், ஏமாற்றுத் தித்திருக்கமும் வெட்ட வெளிச்சமாக என் கண்களுக்குத் தெரிவதால், ஒத்துப் போக முடியவில்லை. ஆனால், என்ன வியப்பு, அல்லது கொடுமை, இங்குக் கூறிய இவ்வத்தனை உணர்வுகளும் எனக்கே உள்ளன போலன்றோ, அப் பேராசிரியர் போலியர் எழுதியும் பேசியும் வருகின்றனர்! என் செய்வது? இதற்கு எங்கே போய் முட்டிக் கொள்வது! அதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்! அந்த வகையில் அக் குற்றச் சாட்டை நானும் மகிழ்ச்சியுடனேயே வரவேற்கிறேன். பிற பின்.

(தொடரும்)

கல்வி பயில வந்த மாணாக்கர்கள், தங்களுள் ஒருவனாகிய தலைமைத் திறம் பொருந்திய சிறந்த ஒளிமணி போன்ற வீரன் அரசேந்திரனைச் சுட்டு வீழ்த்தச் செய்தோனாகிய சழகப் பதிவாளன், (முன்னேரே அஞ்சித் தன் வாழிடமாகிய மனையைத் துறந்து) புறம் போகிய பின்னை, அம் மனையின் முன்றிலில், (அவன் உள்ளே விட்டுச்சென்ற மனைப்பொருள்களாகிய) சிறப்புடைய ஈட்டங்களை (அவன் உள்ளேசென்று, கொண்டு வந்து போட்டுக்) குவித்து, தொடர்ந்து முழங்குகின்ற வெற்றி முரசம், (ஈரத்தால் தளர்வுற்று முழக்கொலிகுறைய, அதனைமீண்டும் விறைப்பேற்றுதற் பொருட்டுத்தீக் கொளுவிக் காட்டி) முருகுவிக்க மூட்டுகின்ற தழல் போல், வெம்மை மிகுந்த எரியினை அடர்ந்து எரியும்படி கொளுத்தி மூட்டிய அக் காட்சியைக் கண்டவர்கள்தாம், (அவர்கள் சினந்து போராடுவதற்குக் காரணமாக விருந்த தமிழ் மொழியின் சிறப்பினை, அவ்வுணர்வின் வழி) உண்மையில் கண்டவர்கள் ஆவார்கள்; அவர்களின் உறுதிப்பாட்டை (இவ் வகையான செயல் வழி நேரில் கண்டு) அறிந்தவர்கள்தாம், (அவர்களின் எழுச்சிக்கு அடிப்படையாக விருந்த) தமிழ் மொழியின் சிறப்பினை உண்மையிலேயே அறிந்தவர்கள் ஆவார்கள்.

குறைந்து விட்ட தமிழ் மொழியின் சிறப்பியல்களை மீண்டும் புதுமை செய்து மலர்ச்சியுறச் செய்யும் மாணவர்களின், இவ் வலிந்த முயற்சி (அழிவின் பாற் பட்டதன்று); அறத்தின் பாற் பட்ட செயலே என்று கருதி மகிழாதவர்கள் (எவரேனும் இருப்பின் அவர்கள்), கொடுமையான வல்லதிகார அரசியல் கொள்கை உடையவர்களாகவே இருத்தல் வேண்டும்.

விரிப்பு : இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் திறங் காக்க வெழுந்த மாணவருள் அரசேந்திரனைக் கொல்லுவித்த கழகப் பதிவாளர்தம் உடைமையைத் தீக்கொளுவி யழித்த மாணவர் தந்திறம் வியந்து பாடியது, இது.

அரசேந்திரன், குண்டடிபட்டு மாய்ந்தான் என்ற செய்தி கேட்டதும், மாணவர்கள், இதற்கெல்லாம் அடிப்படை, பல்கலைக் கழக வளாகத்திற்குள் காவலர்களை வரவிட்ட பதிவாளரின் செயலன்றோ என்று எண்ணி, வெகுண்டெழுந்து, அவர் வீடு சென்றனர். செல்லவும், கழகப் பதிவாளர் அதன் முன்பே, தம் வீட்டைப் பூட்டி விட்டுக் குடும்பத்துடன் வெளியேறியிருந்ததைக் கண்டனர். காணவும், மீண்டும் கொதிப்பு மேலிட்டவராய் அவர் வீட்டை உடைத்து, உள்ளே இருந்த அவரின் உடைமைகளை யெல்லாம் வெளியே எடுத்துக் கொண்டு வந்து போட்டுக் குவித்துத் தீ வைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கினர். இந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்தவர்கள், அம் மாணவர்களின் எழுச்சிக்குத் தமிழ் அன்றோ காரணம் என வியந்தனர். அந்த நிலையை நேரில் கண்டு வியந்து எழுதியதாகும் இப் பாடல்

கவுள் - யானையின் கதுப்பு. கன்னம்.

நனை வேழம் - மத நீரால் நனைக்கப்பட்ட ஆண் யானை.

கணை பட்டாங்கு - ஏற்கனவே மதம் பிடித்துள்ள ஆண் யானையின் மேல், அம்பு தைத்தது போல்.

செயிர்வு - கடுஞ்சினம்.

கல்விச் செவ்வியர் - கல்வி பயிலும் மாணுக்கர்கள். மாண்பு என்னுஞ் சொல்லின் அடிப்படையாகத் தோன்றிய மாணுக்கர் என்னுஞ் சொல்லுக்கு இணையான புதுச்சொல், செவ்வியர்.

ஒரு தலை மா மணி - மாணவர்களுள் தலை சிறந்த வீரனுகிய அரசேந்திரன்.

உகுத்தோன் - உயிரை உகுக்கச் செய்தோனுகிய பதிவாளன்.

பெயர்த்த - வெளியேறிப் புறம் போகிய. எவர்க்கும் தெரிவியாது சென்றமை பெயர்தல் எனலாயிற்று.

மனைமுகத்து .... குவித்து - பதிவாளனின் மனையின் முன்றிலில் அவனது தனி ஈட்டமாகிய மனையடை பொருள்களைக் கொண்டு வந்து குவித்து. தனியீட்டம் என்றது அவன் அல்வழியில் தொகுத்த குறிப்பாயிற்று.

குவித்து - ஒன்றெனக் கூட்டி.

முமுங்கு விறல் பறை : வெற்றிப் பண் முழங்கித் தொய்ந்த பறைத் தோல்

முருக மூட்டும் அழல் போல் - பறைத் தோலின் தொய்வு நீங்கிச் சூடேறி விறைப்புறுதற்கு மூட்டுகின்ற எரி நெருப்புப் போல்.

வெவ்வெரி அடர - வெப்பமான தீ நாக்குகள் நெருங்கி எரிய.

காட்சி கண்டோர் - அக்காட்சியினை நேரில் கண்டவர்களே;.

தமிழ் கண்டோரே! : உண்மையில் தமிழ் மொழியின் ஆற்றலைக் கண்டவர்கள் ஆவார்கள்.

மாணவர்கள் பதிவாளனின் உடைமைகளை, அவர் வீட்டினின்று வெளியே எடுத்துக் கொண்டுவந்து போட்டுக் குவித்துத் தீமூட்டி எரித்தது, அவர்கள் தமிழ் மொழியை இந்தி நுழைப்பினின்று காக்க வெழுந்த எழுச்சியினுல் ஆதலின், அவ் வெழுச்சிக்குக் காரணமாகிய தமிழ் மொழியின் உணர்வாற்றலே மாணவர்களின் ஊள்ளூர நின்றது, என்றது.

பூட்கை - கொள்கை உறுதி.

பூட்கை .... தமிழறிந்தோரே! - மாணவர்களின் கொள்கை உறுதியை நேரில் அறிந்தவர்கள்தாம், (அதற்குக் காரணமாகிய

தமிழ் மொழியின் சிறப்பியல்கள் இவ்வளவு உறுதியைத் தர வல்லனவா என்று எண்ணித்) தமிழை உண்மையில் அறிந்தவர்கள் ஆவார்கள்.

பொன்றிய - குறைந்த, மறைந்த.

தமிழ்ச்சீர் - தமிழ் மொழியினது பழைமை, புதுமை, முதுமை' இளமை, தனிமை, இனிமை, திண்மை, நுண்மை, புகன்மை (புகலுந் தன்மை), அகன்மை (விரிந்த தன்மை), உண்மை, எண்மை (எளிமை), நயன்மை (விரும்புந் தன்மை), இயன்மை (இயற்கைத் தன்மை), தாய்மை, தூய்மை, வியன்மை, பயன்மை (பயன்படும் தன்மை), எழின்மை, பொழின்மை (பொருள் தரும் தன்மை), இழுமை (இளகல் தன்மை), முழுமை (நிறைந்த தன்மை), செம்மை, மும்மை (இயல், இசை, நாடகம் எனும் மூன்றியல் தன்மை), சீர்மை, ஓர்மை (ஓரியல் தன்மை - ஒருமைத் தன்மை) ஆகிய இருபத்து ஆறு சிறப்பியல்களை.

புதுக்கி - (இவ்வாறு தமிழ் மொழியின் சீர்மைகள் பலவாக இருப்பினும், அவை நலிந்தும் மெலிந்தும், திரிந்தும் திசைந்தும், மறைந்தும் குறைந்தும், மறந்தும் இறந்தும் காணப்படும் தன்மைகளைச் சரி செய்து அவற்றைத் தற்கால அறிவியல் வளர்ச்சிக் கேற்பப்) புதுமை செய்து,

மலர்த்தும் - அதனை எதிர்கால நிலைப்பாட்டுக்கு உரிய வகையில் விரிவும் மலர்ச்சியும் உறும்படி செய்கின்ற:

மாணவர் அறவினை - (மாணவர்தம் எழுச்சியை வன்முறை என்று இகழாமல், புதியதோர் உலகு செய்யும் புரட்சிப் பணியாகிய) கூர்தற மேம்பாட்டு உழைப்பு என்று கருதி.

மகிழார் - இவ்வாறு ஓர் எழுச்சி வந்ததே என்று எண்ணி மகிழமாட்டாதவர்கள்,

கோணை அரசியல் : நேரல்லாமல் வளைந்த கொள்கைகளையும் நடைமுறைகளையும் கடைப் பிடித்து நடத்தப் பெறும் இக்கால வல்லாண்மை அரசியல் தன்மையின்,

கொள்கையினோரே - கொள்கையைக் கொண்டவர்களே!

இப்பாடலின் வரலாற்று நிகழ்வினை முன்னைய மூன்றுபாடல்களானும் உரைகளானும் கண்டு கொள்க.

மாணவர்களின் எழுச்சி அறமுடைய செயலன்று என்று மனமும், முகமும் சுளுக்குவார், கைதேர்ந்த அரசியல் கரவுடையவர்களே அன்றி, உண்மையின் தமிழ் மொழியின் சிறப்பியல்களை அறிந்தாரல்லர் என்று தெளிப்பான் வேண்டி உரைத்தது என்க.

இப்பாடல், முன்னது திணையும், முதுமொழிபேணல் என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன. 0

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர் கோ. கோவிந்தனார்.

குளிர்நீர் செலுத்து முறை

அலித்தன்மைக்கு, தாக்கப்பட்ட உறுப்புகளின் மேலேயே மருத்துவம் முன்னர் செய்து வந்தனர். இன்றும் சிலர் இம் முறையைக் கைக்கொள்கின்றனர். சிறுநீர் புறவழியின், பின் பகுதியும், புராசுடேட் பகுதியும் அழற்சி போன்ற கேடுகளால் தாக்கப்படுவதால்தான் இந்நிலை உண்டாகிறது என நினைந்து இவ்வகை மருத்துவம் செய்கின்றனர். சிறுநீர்ப் புறவழியில் ஏற்பட்ட தீங்கு, முழுக்க முழுக்க மன அலித்தன்மைக்கு உரிய குறிகளைத் தோற்றுவிக்கலாம். பொதுவாக நோயை ஆராயும் பொழுது இத்தீங்கை நோக்காது விட்டிருக்கலாம். ஆண்மை பெற இத்தீங்கை அகற்ற வேண்டும் என்பது சில மருத்துவர்களின் நோக்கம். மற்ற மருத்துவ முறைகளுடன் உறுப்பின் மேலேயே செய்யும் மருத்துவமும் சேர்த்துச் செய்யப்பட்டால் சில வேளைகளில் நல்ல பயனை உண்டாக்கலாம். சிறுநீர்ப்புற வழியின் பின் பகுதியில் வெள்ளிக் காலகையைச் செலுத்தினால் நன்மை பயக்கிறது. ஆனால் நீண்ட நாள்கள் இவ்வாறு செய்தால், அப்பகுதி இழையங்கள் எல்லாம் இறக்கின்றன. இது சமுத்துவலி போய் திருகு வலி வந்தது போன்றாகும். நோய் கடுமையாக இருக்கும் பொழுது, அந்த வேளைக்கு மட்டும் இம்முறையை மருத்துவர்கள் பலர் கைக் கொள்கின்றனர். மற்றொருமுறை யாதெனில், சிறுநீர்ப் புற வழியில் குளிர்ந்த, தீதற்ற நீரைச் செலுத்துவதாகும். இம்முறை முன்னதைவிட துன்பமற்றது, மிகுந்த நன்மை பயக்க வல்லது. குளிர்ந்த நீருக்குப் பதிலாக $\frac{1}{2}$% போரிக் அமிலக் கரைசலை அல்லது சோற்று உப்புக் கரைசலைச் செலுத்தலாம்: ஆனால் அவை குளிர்ந்திருக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் 100 கண நூற்று அளவி (சென்டி மீட்டர்) குளிர்ந்த கரைசலை மூன்று அல்லது நான்கு முறைகள் செலுத்த வேண்டும். ஒவ்வொரு முறைக்குப் பின்னும் நோயாளியைச் சிறுநீர் கழிக்கும்படி செய்யவேண்டும். குளிர்ந்த கரைசலை சைக்ரோ போர் என்ற கருவியின் மூலமாகவும் செலுத்தலாம். இக்கருவி ஒரு நீண்ட மெல்லிதான, இருபக்கமும் திறந்த குழாய். இக்குழாய்க்குள் மற்றும் இரு குழாய்கள் உள்ளன. சிறுநீர்ப்புற வழியில் அக் குழாயைச் செலுத்திய பின் உள்ளே உள்ள இரு குழாய்களுக்கு இடையே தண்ணீர் இடைவிடாது சுற்றிக்கொண்டே இருக்கும்படி செய்யப்படுகிறது. ஆகவே நாம் வேண்டும் சூடுநிலை எவ்வளவு நேரத்திற்கு வேண்டுமானாலும் இருக்கும்படி செய்யலாம். இந்தக் குளிர்ந்த நீர் முறையால், சிறுநீர்புற வழியில் ஏற்படும் அழற்சியைப் போக்க முடியும். சிறுநீர்ப்புற வழியில் உள்ள இழையங்கள் முறுக்கும், வன்மையும் பெறுகின்றன. சில வேளைகளில்

செலுத்திய உடனேயே உடனடியாகப் பயனைக் காணலாம். நோயாளிகளில் சிலருக்குக் குளிர்ந்த நீர் செலுத்திய உடன் அதிர்ச்சியும், குருதித் தேக்கமும் ஏற்படுகின்றன. மலவாயின் மூலமாகக் குளிர்ந்த நீரைச் செலுத்தினும் மேலே கூறிய நன்மைகள் ஏற்படலாம்.

இம்முறைகளை மருத்துவர்கள்தாம் கையாள வேண்டும். நோயாளி தனக்குத் தானே கையாளக் கூடாது. கையாண்டால் பல கேடுகள் விளையலாம். கருவியில் எங்கேனும் தூய்மைக் குறைவு இருக்குமாயின், அதனால் சிறுநீர்ப் புறவழி, புராசுடேட்டு, சிறுநீர்ப்பை ஆகியவை நோய்வாய்ப்பட நேரிடலாம். முற்கால மருத்துவர்கள் இவ்வகை முறைகளை மிகப் புகழ்ந்துள்ளனர். அம் முறைகளால் சிலவேளைகளில் சில நன்மைகள் ஏற்படலாம், ஆனால் இம்முறைகள் கிளர்ச்சி உண்டாக்கும் தன்மையன; தற்காலிகமாவன. ஆகவே அவை கிட்டத்தட்ட காமமூட்டிகளை ஒத்துள்ளன.

குளிர்நீர் குளிப்பு முறை

அலித்தன்மையைப் போக்கப் பலவகைக் குளிப்பு முறைகள் கையாளப்பட்டன. அன்றிலிருந்து, இன்றுவரை, குளிப்பு முறையால், நன்மையா அல்லவா என்பது பற்றி மருத்துவர்களே மாறுபட்ட நோக்கங்களை வெளியிடுகின்றனர். குளிப்பு முறைகளைக் கைக்கொள்ளும்பொழுது மிக உன்னிப்பாக இருக்க வேண்டும். குளிர்ந்த நீர் குளிப்பால் ஏற்படும் அதிர்ச்சியால், அலித்தன்மை உள்ளவர்களுக்கு உடல் முறுக்கு ஏறுகிறது. இதனால் சிலருக்குக் கேடு உண்டாகலாம். குளிர்ந்த நீர் குளிப்பு கலவிக் கிளர்ச்சியை ஊட்டவல்லது. ஆகவே விலகி இருந்து, ஓய்வு எடுக்கும் காலங்களில் குளிர்ந்த நீர் குளிப்புக்கூடாது. சரியற்ற எழுச்சியோ அல்லது கொஞ்சநேர எழுச்சியோ உடைய ஆண் குறி உள்ளவர்கள், புணர்வதற்கு முன் குளிர்ந்த நீரில் குளித்தால் அக்குறைகள் விலகலாம். உடலின் ஒரு பகுதியைக் குளிர்ந்த நீரால் கழுவி, விரைவாகக் கொஞ்சம் சூடு உண்டாகும் படி அப்பகுதியைத் துடைத்துவிட வேண்டும். இவ்வாறு உடலின் ஒவ்வொரு பகுதியாகக் குளிக்க வேண்டும். இதுவே குளிர்ந்த நீரில் குளிப்பதற்குக் கேடற்ற முறையாகும். இதற்கு அடுத்த படியாக, மேலேயிருந்து பல துளிகளாக விழும் முறையையும், சிலிட்சு குளிப்பு முறையையும் கூறலாம். குளிப்பதற்குத் தொட்டி நிறைய குளிர்ந்த நீர் பயன்படுத்தப்பட்டால், சில விநாடிக்கு மேல் தொட்டிக்குள் தங்கி இருக்கக் கூடாது. தொட்டியைவிட்டு வெளி வந்த உடனேயே விரைவாக நன்றாகத் துடைத்துக்கொள்ள வேண்டும். கடலில் அல்லது ஆற்றில் குளித்தல், ஆண்மையைப் பெற உதவுவதுடன், உடல்நிலையை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளவும் உதவுகிறது. வெந்நீர்க் குளிப்பால் உடல் முறுக்கு ஏற்படுவதற்குப் பகரமாகத் தளர்ச்சிதான் உண்டாகிறது.

அதனால் வெந்நீர்க் குளிப்பைக் கைவிடவேண்டும். புராகடேட் அழற்சி இருந்தால் மட்டும் வெந்நீரில் குளிக்கலாம். அதற்குக் கூட' சூடுசிலிட்சு குளியல் முறைதான் ஏற்றது. மேலே கூறியவை கள் தொட்டியில் நீரை நிரப்பி அதனுள் உட்கார்ந்து குளிக்கும் முறைகள், நீராவி, டர்சிசு, காற்று, வாயு போன்ற குளிப்பு முறைகளால் நன்மை ஏற்படலாம் என மருத்துவர்கள் சிலர் கூறுகின்றனர்; ஆனால் அவை அலித்தன்மையைப் போக்கப் பயன் உடையன என்பது ஐயத்திற்கு இடமின்றி மெய்க்கப்படவில்லை.

மின்சார முறை

அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வதில் மின்சாரமும் பயன் படுகிறது. மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட புதிதில், அலித்தன் மையைப் போக்க இது பல்வழிகளில் பயன்படலாம் என நினைத் தனர். ஆனால் இக்கால மருத்துவர்கள் அந்த அளவிற்கு ஒத்துக் கொள்வதில்லை. கலவிக்களைப்பை நீக்க மின்சாரம் பயன்படலாம் என நம்பும் மருத்துவர்கள்கூட அதைச் செலுத்தும் வகைபற்றி மாறுபட்ட எண்ணங்களை வெளியிடுகின்றனர். அலித்தன்மைக்கு மின்சாரம் மூலம் மருத்துவம் செய்ய, விரிவான, விலை உயர்ந்த கருவிகள் வேண்டியிருக்கின்றன.

காற்று உறிஞ்சு முறை

அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வதில், பல சூழ்ச்சிகளும் கருவிகளும் அன்றிலிருந்து இன்றுவரை கையாளப்படுகின்றன. கருவிகளில், பெரும்பாலானவற்றில், வெற்றிடம் உண்டாக்கவல்ல காற்று உறிஞ்சி அமைக்கப்பட்டிருக்கும். காற்று உறிஞ்சி ஒரு கிண்ணத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். அக்கிண்ணம் ஆண்குறி யைமட்டும் அல்லது ஆண்குறியையும் தோல்பையையும் சேர்த்துச் சுற்றி அடைத்திருக்கும். கிண்ணத்தில் உள்ள காற்று உறிஞ்சப் படுகிறது. கிண்ணத்தில் காற்று இல்லாத ஒரு வெற்றிடம் உண்டாக்கப்படுகிறது. காற்றின் அழுத்தத்தை சமன் செய்யக் கிண்ணத்தில் உள்ள உறுப்புகளுக்கு மிகுந்த குருதி, வந்து சேருகிறது. அதனால் ஆண்குறி எழுச்சி அடைகிறது. அதனுடன் சேர்ந்த மற்ற உறுப்புகளும் கிளர்ச்சி அடைகின்றன. ஆண் குறிக்கு மிகுந்த குருதி வந்து சேருவதால் மட்டும் ஆண்மை ஏற்பட்டுவிடாது. அது பலவகைக் காரணங்களைப் பொருத்தது. ஆகவே இம்முறையால் நன்மை ஏதும் ஏற்படுமா என்பது ஐயமே. விரல் விட்டு எண்ணக்கூடிய மருத்துவர்களே, இம்முறை யால் நன்மை ஏற்பட்டுள்ளது எனக் குறித்துள்ளனர். இம்முறை யில் கையாளப்படும் ஆரவாரங்களைப் பார்த்தும் நோயாளிக்கு ஒருவகை மனநிறைவு ஏற்படலாம். அம் மனநிறைவால் இந்த நன்மை உண்டாகி இருக்கலாம்.

தொய்வ உறைவழி விறைப்பு முறை

மற்றும், விறைப்புப் பொருள்களும், தப்பைகளும் ஆண்குறி யின்மேல் பொருத்தப்படுகின்றன. இவை தொய்வத்தால் (ரப்ப

ரால்) ஆனவை. அந்தத் தொய்வச்சுறைக்குள் (ரப்பருக்குள்) சிறு எஃகு நீள் சுருள் அமைக்கப்பட்டிருக்கும். இவை ஆண்குறியின் மேல் பொருத்தப்பட்டபின், ஆண்குறியில் ஒருவகை எழுச்சி உண்டாகிறது. இக்கருவி பொருத்தப்பட்டபின் ஆண்குறி, பெண்குறியில் நுழைக்கப்பட்டு ஒருவகையாகப் புணர்ச்சி நிறைவேறுகிறது. இக்கருவிகளில், மிகப் புழக்கத்தில் உள்ள ஒன்றின் பெயர் 'விம்பசு' எனப்படும். இக் கருவிகளால் அலித்தன்மையை போக்கமுடியாது. ஆண்குறியின் தளர்ந்த எழுச்சியின் போது உதவுகின்றன, அவ்வளவே. இவ்வகைக் கருவிகளில் பொருளை வீணுக்குவதைவிட, மருத்துவ வல்லுநரை அணுகி அவர் சொற்படி கேட்பதே சிறந்தது.

முதுகந்தண்டு நீட்டுமுறை

மற்றும் பலமுறைகள் கையாளப்பட்டன. அவற்றில் பல, ஆராய்ச்சிக் கட்டத்தை விட்டே வெளிவரவில்லை. அவற்றுள் ஒன்றுதான் கூடுமுறை. இதற்கென செய்யப்பட்ட ஒரு கூடு மாந்தனின் தோள்களை மட்டும் பிடித்துக் கொண்டு, உடலின் மற்றப்பகுதிகள் தரையைத் தொடாது தொங்கும்படி செய்யும். அம்முறையால் அம்மாந்தனுடைய கனத்தால் அவனுடைய முதுகுத்தண்டு நீட்டப்படுகிறது. முதன்மையான கலவி நரம்புகள் முதுகுத் தண்டில் அமைந்துள்ளன. முதுகுத்தண்டு நீளுவதால், அதிலிருந்து புறப்படும் கிளர்ச்சிகளுக்கு ஊட்டம் ஏற்படலாம் என நம்பப்படுகிறது. இதை மறுப்பாரும் உளர்.

உணவு முறை

அலித்தன்மைக்குச் செய்யப்படும் மருத்துவத்தில் உணவு ஒரு தனி இடத்தைப் பெறுகின்றது. உணவு முறையாலேயே அலித்தன்மையை நீக்கிவிடலாம் என்பது பொருளன்று. உணவு நோயாளியிடம் உள்ள ஆண்மையை வன்மையுறச் செய்கிறது. பின் அவ்வன்மைக்கு ஊட்டம் கொடுக்கிறது. குறை உணவால் கருஉறச் செய்யும் தன்மையும், கலவி வினையும் குறைகின்றன. இஃதை ஆராய்ச்சியின் மூலம் மிகஎளிதில் காட்ட இயலும். ஆகவே அலித்தன்மை உடையவரின் உணவு கலப்பு உணவாகவும், ஊட்டம் கொடுக்கவல்லதாயும், புணர்ச்சி உணவைத் தூண்டும் தன்மை உடையதாகவும் இருக்க வேண்டும். புரதசுடேட் அழற்சி இருந்தால் உணவில் கட்டுபாடு வேண்டும். தொந்தி, தொப்பை உண்டாக்காத நல்ல சரியான உணவை வேண்டுமளவு உட்கொள்ள வேண்டும். அலித்தன்மை உடையவர்கள் ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறு முட்டை உட்கொள்ள வேண்டும். சிறிது உப்புடன், காலை உணவிற்கு முன் இரண்டும், நான்கை அந்த நாளுக்குள் உட்கொள்ள வேண்டும். ஊன் உண்போர் ஊனும், மீனும் தங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். மிளகு, கிராம்பு போன்ற மணப் பொருள்களையும் ஊறுகாய் போன்ற சம்பாரங்களையும் விருப்பம் குறைவாக இருக்கும்

பொழுதும், எழுச்சி குறைவாக இருக்கும் பொழுதும் பயன் படுத்தலாம். அலித்தன்மையில் விரைவு விந்து வீழ்கை இருக்கு மாயின் மனப் பொருள்களை மிக உன்னிப்புடன் பயன்படுத்த வேண்டும். ஏன் எனில் அவை தள்ளுநடுவத்தையும், எழுச்சி நடுவத்தையும் தூண்டக்கூடியவை. வெறியம் எந்த அளவில் பயன்படும் என்பதை முன்பே பார்த்தோம். வெள்ளைப்பூண்டும் வெங்காயமும் கலவி ஆற்றலை வன்மை செய்ய வல்லன.

வைட்டமின்கள் என்ற உயிர்ச் சாரங்கள் உண்ணும் உணவில் வேண்டிய அளவு இருக்க வேண்டியது மிக மிக இன்றியமையாத தாகும். ஒவ்வோர் உயிர்ச்சாரமும் (வைட்டமினும்) ஒரு குறிப் பிட்ட வேலையைச் செய்கின்றது. இனப்பெருக்கத்திற்குப் பயன் படக்கூடியது வைட்டமின் 'இ' ஆகும். ஒருவர் உணவில் இவ் வைட்டமின் பலகாலமாக இல்லாது இருந்தால், அவருக்கு மலட்டுத்தன்மை உண்டாகிறது. அவருடைய ஆண்மை குறை கிறது இவ்வைட்டமின் பல உணவுகளில் வேண்டிய அளவு உள்ளது. சோளத்துமையின் நுனியிலும், லெட்டூசிலும், இவ்வுயிர்ச் சாரம் (வைட்டமின்) மிகுந்த அளவில் உள்ளது. இழந்த ஆண் மையைக் கொடுக்கவல்லது என மிகுந்த அளவில், இவ்வுயிர்ச்சாரம் விளம்பரம் பெற்றுள்ளது. உணவில் இந்த 'இ' உயிர்ச்சாரக் குறைவால் ஆண்மைக் குறைவு உண்டாகி இருக்குமாயின், இவ் வுயிர்ச்சாரம் கொடுக்கப்பட்டவுடன் அக் கேடு நீங்கிவிடும். ஆண்மைக்குறைவு பிற காரணங்களால் ஏற்பட்டதாயின் இச் சாரத்தால் மட்டும் ஆண்மை திரும்பி விடாது.

தகுந்த மருத்துவத்துடன், உடலைச் சரியான நிலையில் வைத்-துக் கொள்வதற்கு உரியவற்றையும் கைக்கொள்ள வேண்டும். வேண்டுமளவு நல்ல தூக்கம் வேண்டும். மலம் ஒழுங்காகக் கழிய வேண்டும். வேண்டுமளவு உடற்பயிற்சி செய்ய வேண்டும். சுருங்கக்கூறின், உடல்நிலையை நன்னிலையில் வைத்துக்கொள்ள எவை எவை எல்லாம் செய்து கொள்ளவேண்டுமோ அவற்றை எல்லாம் செய்து கொள்ள வேண்டும். (தொடரும்)

திருவள்ளுவர் நாள்காட்டி

வழக்கம்போல் நெய்வேலி, உலகத் தமிழ்க் கழகம் வெளி யிட்டுள்ள 'திருவள்ளுவர் நாள்காட்டி' வரப்பெற்றோம். தமிழ் எண்கள் முகாமையாகவும், ஆங்கில மாத எண்கள் சிறிய அளவி லும் அச்சிடப்பெற்றுள்ளன. அறிஞர்களின் பொன்மொழிகள், பிறப்பு இறப்புநாள் குறிப்புகள், அரசு விடுமுறை நாட்கள் முதலிய அனைத்துத் தகவல்களும் அடங்கி இரு வண்ணத்தில் அச்சிடப்பெற்ற தூயதமிழ் மாத நாள்காட்டியாகும் இது. விலை குறிக்கப் பெறவில்லை.

விளத்தங்களுக்கு,

கு. முகிலன் பொருள். உ.த.க.கிளை, 34 E, நகர்க்கூறு-5. நெய்வேலி-607803.

செய்திகள்

1. கோபி — மேனிலைப்பள்ளி - இலக்கிய மன்ற விழா:

கடந்த 13-12-83-ஆம் நாள், கோபி செட்டிப் பாளையம் வெள்ளி விழா மேனிலைப் பள்ளியில் 'இலக்கிய மன்றத்தொடக்க விழா' பெரியார் மாவட்ட உ.த.மு.க. தலைவர் திரு. அழகண்ணன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. வரவேற்புரையை திரு.வெ.ப.நா. அவர்கள் வழங்கினார்கள் அறிமுகவுரையைக் கோபி அரசினர் கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு.கா. அரங்கச் செல்வன் க.மு.அவர்கள் ஆற்றினார். அறிஞர்கள், தமிழாசிரியர் புலவர்: திரு. பாரிமணியம். க.மு. தென்மொழி நா.இளமாறன், திரு. கா: இளமுருகன் (பு.புளியம்பட்டி. மறைமலையடிகள் மன்றத் தலைவர்) ஆகியோர் உரைக்குப்பின்,பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'ஐரோப்பிய நாடுகளில் மாணவர்கள்' என்னுந் தலைப்பில் ஒன்றரை மணிநேரம், நகைச்சுவையும், கருத்தாழமும் மிக்க சிறப்புரையாற்றினார்கள். திரு: மணிக்குமார் நன்றியுரை கூறினார். பள்ளித்தலைமையாசிரியர் முன்னிலை தாங்கினார். மாண வர்கள் மிக்க அமைதியுடன்இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. அதன்பின்னர் பாவலரேறு அவர்களுக்குப் பேரா. அரங்கச் செல்வன் அவர்களின் இல்லத்தில் பகல் விருந்து தரப்பெற்றது.

2. சாவித்திரி — சௌந்திர பாண்டியன் வாழ்க!

சென்ற நளித்திங்கள் 28 (14-12-83)-ஆம் பக்கல், ஈரோடு வட்டம் உ.த.மு.க. தலைவர் புலவர் தி.மூ. அரச மாணிக்கம்—

ப. அருளி அவர்களின் அரிய நூல்கள்

உலக மூத்த மொழி தமிழின் உயர்தனிச் செம்மாந்த நிலைகளை, மொழியின் மூத்த தனிச் சிறப்புகளை மொழியியல் நெறியோடும்,அறிவியல் கண்ணோட்டத்தோடும் இயம்பும் நூல்கள் விற்பனைக்கு அணியம்! பயின்று பயனடையுங்கள்!

1)	தகுதி (மறுபதிப்பு) (அச்சில்)	விலை உரு. 5.00
2)	இவை தமிழல்ல.. ...! (அயற்சொல் அகராதி)	விலை உரு. 10.00
3)	இந்திய அரசே இன்னுமா உறக்கம்	விலை உரு. 5.00
4)	சிங்கள அமர்க்களம்!	விலை உரு. 5.00

(அஞ்சல் செலவு தனி)

தொடர்புக்கு: அறிவன் பதிப்பகம் 2/5 காளிகோயில்தெரு, தமிழூர், புதுச்சேரி — 605009.

சரோசினிதேவி இணையரின் மகன், செல்வன் சௌந்திரபாண்டியனுக்கும், சென்னிமலை திருவாளர்கள் தி கிருட்டிணசாமி—கண்ணம்மாள் இணையரின் மகள், செல்வி சாவித்திரி என்னும் பார்வதிக்கும், காலை 6 மணியளவில் ஈரோடு, பிரப் சாலையிலுள்ள என்.எம். எசு.கலையரங்கில், புதுமைப் பாவலர் அரங்க நாராயணசாமி அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருவாளர்கள், புலவர் தி. முருகுசுந்தரம், அ. சண்முகசுந்தரம் எம்.கே. சுப்பிரமணியம்,புலவர் த.ஆறுமுகனார் ஆகியோர் மணவிழாவாழ்த்துரைவழங்கினர். ஈரோடு,உ.த.மு.க.நிகழ்ச்சிக்கு வருகைதந்திருந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மணமக்களை நேரில் சென்று, வாழ்த்திப் பாராட்டு வழங்கினார்கள். பேரா. உ. பால சுப்பிரமணியம் நன்றி கூறியபின், திருமணம் இனிதே நிறைவுற்றது.

3. செல்வராசு—உமா வாழ்க :

கடந்த 15-12-83 வியாழன் காலை 8 மணியளவில், நெய்வேலி 10-ஆவது வட்ட திருமண மண்டபத்தில், சென்னை அசோக் லேலண்டில் பணியாற்றும் தென்மொழி அன்பரும், திருவொற்றியூர் நகர தி.க. செயலரும் ஆகிய திரு. பெ. செல்வராசு அவர்களுக்கும் செல்வி. ப. உமாவிற்கும், பெரியார் பேருரையாளர் பேரா. மா. நன்னன் க.மு. அவர்கள் முன்னிலையிலும், மலேசிய திராவிடர் கழகத் தேசியத் தலைவர். திருச்சுடர் கே.ஆர். இராமசாமி அவர்கள் தலைமையிலும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்த்திருமணம் நடத்தி வைத்தார்கள். விழாத் தொடக்கத்தில் பெரியார் பெருந்தொண்டர் திரு. ஏ.எல். சக்தி மோகன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள், கனகசபாபதி (தெ.ஆ. தி. தொ.க. அமைப்பாளர்.), மாயாண்டி, வி. செயராமன், குணசீலன் (செ.மா. தி. தொ. க. அமைப்பாளர்) க. பலராமன் (வ.செ.மா.தி.க.த.) செ. ஏழுமலை, துரை. சந்திரசேகரன், கரு. அழகப்பன், மாயாண்டி, இராசேந்திரன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினர். மணமகனின் நன்றியுரைக்குப்பின் இனிய விருந்துடன் திருமணம் இனிது நிறைவுற்றது.

4. அடையாறு தமிழ்ச்சங்கம்—சென்னை :

கடந்த 17—1—84 மாலை 5-30 மணியளவில், சென்னை, அடையாறு தமிழ்ச்சங்கம் நடத்திய காணும்பொங்கல் விழா நிகழ்ச்சி, இந்திராநகர் இளைஞர் விடுதியில் நடைபெற்றது. விழாவிற்குச் சங்கத்தலைவர் பொ.சோமசுந்தரம் தலைமைதாங்கினார். பேரா. பாவலர்.கணபதி அறிமுகவுரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து பாவலரேறுபெருஞ்சித்திரனார் அவர்கள் பேசுகையில், தமிழ்ச்சங்க, அறிஞர். திரு. இலக்குமிரதன் பாரதி, அறிஞர் சிவபாதசுந்தரம் (இலங்கை), பேரா. கொண்டல் சு. மகாதேவன், பொறியியல் அறிஞர் திரு. கொடுமுடி சண்முகம் முதலிய பலரை உறுப்பினர்களாகக் கொண்டு சிறந்து விளங்குவதையறிந்து தாம் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும், அதனால் அது பொழுதுபோக்

காகவும், பட்டிமன்றம், பாட்டரங்கம் முதலிய வீணை ஆரவார நிகழ்ச்சிகளிலும் சுற்றுலாக்கள் ஆகியவற்றிலுமே கவனம் செலுத்திவிடாமல், பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில்; தமிழ் வகுப்புகளை நடத்துதல், இளைஞர்களைப் பொதுப்பணிகளில் ஈடுபடச் செய்யுமாறு முயற்சிகள் செய்தல், அறிவு நூல்களை வெளியிடுதல் முதலிய பயனுடைய பணிகளிலும் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன் தாம் அண்மையில் சென்றுவந்த ஐரோப்பியச் செலவு குறித்த செய்திகளையும் இணைத்து, நம் நாடு அந்நாடுகள் போல் முன்னேற வேண்டுவதற்கு என்னென்ன முயற்சிகள் செய்யப்படவேண்டும் என்பன பற்றியெல்லாம் விரிவாக எடுத்துரைத்தார். இரவு 8-30 மணியளவில் 'சங்க'ச் செயலாளர் திரு. கொடுமுடி சண்முகம் அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது: வந்திருந்த அனைவர்க்கும் கூட்டத் தொடக்கத்தில் இனிப்புடன் சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

கூட்டம் முடிந்ததும் 'தாய்' இதழ் அலுவலகத்திலிருந்து வந்திருந்த செய்தியாளர்க்குப் பாவலரேறு, அங்கேயே செவ்வி (நேருரை) அளித்தார்.

(40-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

'பிரிபொருட்சொற்றொடர்' என்பதைச் சொல்லணியில் தண்டியார் அமைத்தார். முத்துவீரர் பொருள்கோளுக்குப் பின் அமைத்தார். உண்மையில் முத்துவீரர் அமைப்பு முறையே சிறப்புடையதாகும்.

விட்ட குறை : தொல்காப்பியத்தில் உள்ள மெய்ப்பாட்டியலை முத்துவீரர் விளக்கியுள்ளார். மிகச் சிறந்த மெய்ப்பாட்டை முத்துவீரர் விளக்கியதிலிருந்து அவர் கால இலக்கணவாசிரியர் தம் எண்ணப் போக்கு புலப்படுகிறது.

அடைநலம் : தமது இலக்கண நூலுள் முத்துவீரர் சீரிய அடைமொழிகளை ஆங்காங்கு ஆண்டுள்ள திறம் போற்றத்தக்கதாகும்

நீங்கா இயற்கை நெறி (836) பனிமதி நுதலி (846) இழை வளர் முலையாய் (846) பொருவரு கற்பின் புனை நலன் (850) பொற்பமை சிறப்பின் கற்பு (853) முதலியவை இலக்கிய நயமுடைய அடைமொழிகளாகும்.

முடிவுரை : தெளிவு, சுருக்கம், விளக்கம், அளவுடைமை, அருமையை, எளிமையாக்கல், வேண்டாதன விலக்கல் முதலிய அழகுகள் அமைந்த முத்துவீரியம் கல்வித் துறையில் பயிற்சிக்குரியதாக ஆக்கப்படுதற்குரியதொன்றாகும்.

முத்துவீரியம் ஐந்திலக்கணமும் முறையுற மொழியும் அருங் கருவூலமாகும். முத்தமிழ் வளத்தை முழங்கு முத்துவீரியம் தமிழிலக்கண ஆராய்ச்சியிற் கனிந்த பொற்கனியாகும். O

முடக்குக் குலைநோய்க் குழந்தை ஆண்டான 1984-85 - ஐ ஒட்டி வெளியிடப்படும் கட்டுரை இது!

நெஞ்சுக்குலையுள் ஒரு தையல்

பர். அ. சங்கரன், பர். சாலமன் விக்டர்

தொண்டை அழற்சி, மூட்டுகளில் வீக்கம் வலி, தொடர்ந்த மூச்சுத்திணறல், நெஞ்சப் படபடப்பு ஆகியவற்றால் குழந்தைகள் அலலல் படும்போது உடனடியாக மருத்துவரைக் கலந்தாய்ந்தால் முடக்குக்குலை நோய் தடுக்கப் படக் கூடியதே!

தொண்டை அழற்சியை உண்டாக்கும் நோய்த்தொற்று, முடக்குக் காய்ச்சல் தாக்குதலுக்கும், நெஞ்சுக்குலை வால்வுகளின் (1) கேட்டுக்கும் வழிவகுக்கிறது என்ற உண்மை சரிவர உணரப்படவில்லை. சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் மட்டும் 1982 இல் செய்யப்பட்ட நெஞ்சக்குலைக்கான 1200 பெரிய அறுவைப் பண்டுவத்துள் பாதிக்கு மேலானவை (2) முடக்குக் - காய்ச்சலால் பழுதுற்ற குலை வால்வுகளுக்காகவே, செய்யப் பெற்றன. இந்தச் சிக்கலால் இந்தியாவில் அறுபது நூறுபிரத்துச்கும் மேற்பட்ட மக்கள் துயர்ப்படுகின்றனர்3 என்றும், அவருள் பெரும்பாலோருக்கு நெஞ்சுக்குலை அறுவைப் பண்டுவரின்4 கவனிப்புத் தேவை என்றும் இம் மருத்துவ நூல் ஒரு முன்னோடியான பேராசிரியர் கோபிநாத் பதிப்பிடுகிறார். இந்த நோயால் பெரிதும் அல்லல்படுபவர், குழந்தைகளும் இளைஞர்களுமே.

முடக்குக் குலை நோயின் முன்னறிவிப்பு, மீண்டும் மீண்டும் வரும் தொண்டை நோய்த் தொற்றே! உங்கள் குழந்தைக்கு அடுத்தடுத்துத் தொண்டைவலி ஏற்பட்டால் குடும்ப மருத்துவரை அணுகுங்கள். அவர் குழந்தையின் தொண்டையுள் உற்று நோக்குவார்; தொண்டையின் அடிநாச் சதையில் நோய்த்தொற்று இருந்தால், நோய்த்-தொற்று எதனால் என அறிய முயல்வார். அடிநாச்சதையை ஓர் உறிஞ்சு பஞ்சுறையால் தடவுவார். நோய்த் - தொற்று எந்த வகை எனத் தீர்மானிக்க, அந்தப் பஞ்சுறை ஆய்வகத்தில் ஆயப்படும்.

நோய்த்தொற்று பல காரணங்களால் ஏற்படக் கூடும். எனினும் அந்த நோய்த் தொற்று நிரற்கோளி (ஸ்ட்ரெப்டோகாக்கஸ் 5) என்னும் நோய்க் குச்சில் நுண்ணுயிரால் - குறிப்பாகச் சில வகை நிரற்கோளி வளர்ச்சியுறுவதால் - உண்டான தென்றால நோய்த் தடுப்பு முறைகள் தேவை. 'பெனிசிலின்' போன்ற

சென்னைப் பொது மருத்துவ மனையில் நெஞ்சுக்குலை மருத்துவ மற்றும் அறுவைப் பண்டுவப் பேராசிரியர்களான இக்கட்டுரை ஆசிரியர்கள் இத்துறையில் பெரும் புகழ் மிக்கவர்கள் (ஆசிரியர்)

நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உங்கள் மருத்துவர் பரிந்துரைப்பார்; சில வேளைகளில் அடிநாச்சதையை அகற்ற வேண்டும் எனவும் தெரிவிப்பார். மாதந்தோறும் பெனிசிலின்(6)ஊசியோ அல்லது நாள்தோறும் பெனிசிலின் மாத்திரையோ போட்டுக் கொள்ளும் நீண்டகால நோய்த் தடுப்பு முறையைக் குறிப்பிடுவார்.

'நிரற் கோளி வகைக் குச்சில் (நுண்ணுயிரி) உடலில் உள்ள தற்காப்பு அமைப்புக்குக் கிளர்ச்சியூட்டுகிறது இதனால் உடலின் தற்காப்பமைப்பு நோய் எதிர்ப்புப் பொருளை(7) உருவாக்குகிறது. அஃதாவது இந்த நிரற்கோளி நோய் எதிர்ப்புப் பொருள் உருவாக்கத்துக்கு வழிவகுக்கிறது உடல் தற்காப்பமைப்பின் நோய் எதிர்ப்புப் பொருள், அடிநாச்சதையில் தொற்றிய வேண்டாத நிரற்கோளியை மட்டுமல்லாது, நிரற்கோளியுடன் அமைப்பு ஒப்புமையுடைய மூட்டுத் திசுக்களையும்(8) தாக்குகிறது. முடக்கு நோய் இவ்வாறு தொடங்குகிறது.

பெரும்பாலான மூட்டுகளில் - குறிப்பாக முழங்கால், கணுக்கால், முழங்கைகளில் வலியும் வீக்கமும் உண்டாகின்றன. மூட்டுகளின் வீக்கமே கூட - தொண்டை வலி ஏதும் இல்லாமலே - வளிப்படிப்பு (வாத) நோயின் முதல் வெளிப்பாடாக இருக்கக் கூடும். முழங்கால், கணுக்கால், முழங்கை, தோள்பட்டை முதலான மூட்டுகளிலோ அல்லது கால் கைவிரல் மூட்டுகளிலோ வலிக்கிறது எனக் குழந்தைகள் முறையிட்டால் உங்கள் குடும்ப மருத்துவரின் அறிவுரைகளை உடனே பெறுக.

அடிக்கடி தொண்டை அழற்சி, மூட்டுகளில் வலி, வீக்கம், தவிர புறக்காரணமின்றி மூக்கில் அரத்தம் வடிதல், கைகால்களின் இயல்பு பிறழ்ந்த அசைவுகள், காலில் 'மிகுக்கும் வலி' முதலானவை கூட முடக்கு நோயின் வெளிப்பாடாக இருக்கக் கூடும். குழந்தைகளிடம் இத்தகைய நோய்க்குறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரைக் கலந்து ஆய்க.

முன்னர்க் கூறியவாறே, முடக்கு நோய்க்கு வழிவகுத்து மூட்டுகளைத் தாக்கிய உடல் தற்காப்பமைப்பின் நோய் எதிர்ப்புப் பொருள், வேண்டாத நிரற்கோளியும் நெஞ்சுக்குலை வால்வுப் பொருள்களும் அமைப்பு ஒப்புமை உடையதால், நிரற்கோளியை மட்டுமல்லாது குலை வால்வுகளையும் தாக்குகிறது. தீயூழாக, இந்த முடக்கு நோய் 'மூட்டுகளை வருடிக் குலையைக் கடிக்கிறது'. அஃதாவது மூட்டுகளை விட நெஞ்சுக்குலையையே பெரிதும் தாக்கக் கூடியது.

முடக்கு நோயால் நெஞ்சுக்குலை தாக்கப்பட்ட குழந்தைகள் மூச்சுத் திணறல், நெஞ்சுவலி, குலைப்படபடப்பு, தளர்ச்சி, எளிதில் களைப்பு முதலியன வருவதாக முறையிடக் கூடும். குழந்தைகளுக்கு

இதில் ஏதாவது ஒரு நோய்க்குறி தென்பட்டாலுங்கூட உடனே மருத்துவரை நாடுக.

தொண்டைப்புண், முட்டுவலி முதலியவற்றுக்கு ஓய்வும், 'பெனிசிலின்', 'ஆஸ்பிரியன்' போன்ற மருந்துகளும் அளித்து உடனடியாகப் பேணினால் குலைக்குத் தாககுதல் ஏற்படாமல் தடுக்கலாம். குலை-தாக்கட்டிருந்தாலும் கூட, தொடக்கத்திலேயே தாக்கத்தைக் கண்டறிந்தால் ஓய்வும் மருந்துகளும் அளித்து, மேலும் ஏற்படும் தாக்கத்தைத் தடுத்து நிறுத்தலாம்.

நெஞ்சுக்குலையுள் நான்கு அறைகள் உள்ளன. வலப்புறம் உள்ள ஒரு மேலறையும் ஒரு கீழறையும் நுரையீரல் பாய்குழாய் வழியாகக் கெட்ட அரத்தத்தை நுரையீரலுக்குப் பாய்ச்சுகிறது. இடப்புறம் உள்ள மேலறையும் கீழறையும் அயோட்டா(10)என்னும் பெரும்-பாய்குழாய் வழியாக உடல்முழுக்க அரத்தத்தைப் பாய்ச்சுகிறது.

அரத்தம் ஒரேதிசையிலேயே பாய்வதற்கு உதவியாக நெஞ்சுக்குலையுள் நான்கு வால்வுகள் உள்ளன. நற்பேறாக குலையின் வலப்பாதியில் உள்ள இரண்டு வால்வுகள் முடக்கு நோயால் தாக்குறுவதில்லை.

குலையின் இடப்பக்கத்தில் உள்ள இரு வால்வுகளும் இடது கீழறையுடன் தொடர்பு உடையன. இந்த இடது கீழறை, தூய அரத்தத்தைப் பாய்ச்சும்போது, இடது மேலறைக்கும் கீழறைக்கும் இடையில் (கப்பலின் பாய்மரப்) பாய் போன்ற இரு இதழ்கள் உள்ள நறுவிசான ஒரு வால்வு, இடது மேலறைக்குள் குருதி திரும்பப் புகாமல் தடுக்கிறது. இதன் வடிமைப்பு நோக்கி, இ:து 'ஈரிதழ் வால்வு'11 எனப்பட்டது. கீழறை,பெரும்பாய் குழாய்க்குள் தூய அரத்தத்தைப் பாய்ச்ச இந்த வால்வு உதவுகிறது. மூன்று பிறைவடிவப் பை போல் அமைந்த அயோட்டா வால்வு, பெரும் பாய் குழாய்க்குள் புகுந்த அரத்தம் இடது கீழறைக்குத் திரும்பாமல் தடுக்கிறது.

ஈரிதழ் வால்வின் துளை, இயல்பாக 3.5 சதுர நூறளவிப் (சென்டி-மீட்டர்ப்) பரப்புடையது. முடக்கு நோயால் இது தாக்குறும்போது நாலில் ஒருபாகமாக (ஏறத்தாழ 0.9 செமீ 8)க் குறுகி விடுகிறது. 'ஈரிதழ்க் குறுக்கம்' எனப்படும் இந்த நோய், இந்தியாவின் பெரும்பான்மையான குலைநோய் ஆக விளங்குகிறது. நற்பேறாக, 'ஈரிதழ் வாழ்வுத்துமி' (12) என்னும் எளிய அறுவையால் இந்த நோய் சரிசெய்யப்பெறுகிறது. இதில் அறுவை மருத்துவர் (பண்டுவர்), விரலாலோ, தக்க விரிவிப்பானாலோ அடைப்புற்ற வால்வை விரித்து விடுகிறார். நோயின் தொடக்கத்திலேயே மேற்கொள்ளப்பெறும் இந்த அறுவைப் பண்டுவம் மிகுந்த பாதுகாப்புடையது; உயிருக்குத் தீங்கு என்பது ஏறத்தாழ இல்லை. வால்வு பழுதடைந்த அளவைப் பொறுத்து, வெவ்வேறு

காலகட்டத்துக்குத் துயர் தணிகிறது. பலர், பல ஆண்டுகளுக்கு நன்றாகவே உள்ளனர்.

சில வேளைகளில் இந்த ஈரிதழ் வால்வு கசியத் தொடங்கும். இந்த நோய், 'ஈரிதழ்க் கசிவு' அல்லது 'ஈரிதழ் இயலாமை' எனப் படும். பொதுவாக, இந்த நோய் மருந்துகளாலேயே தணிக்கப் படும். எனினும் மருந்துகளை உட்கொண்ட போதிலும் ஒரு நோயருக்கு முச்சுத்திணறல் மிகுந்தால் இந்த வால்வை மாற்ற வேண்டும்.

முடக்கு விளைவால், பெரும்பாய்குழல் வால்வில் ஏற்படும் அடைப்பு, 'பெரும்பாய்குழல் குறுக்கம்' அல்லது 'அயோட்டாக் குறுக்கம்' எனப்படும். ஈரிதழ்க் குறுக்கம் போலல்லாது, இந நோய்க்குக்குலைத்திறப்பு அறுவைப்பண்டுவம் தேவை. 'அயோட்டிம் வால்வுத்துமி' என்னும் முறையால் வால்வுத்துளை விரிவிக்கப்படும். எனினும் இந்த வால்வு மிகக் கேடாகத் தாக்கப்பட்டிருந்தால் இதனையும் மாற்ற வேண்டும்.

முடக்குநோய் வால்வுக் கதுப்புகளைப் பாதிப்பதால், அயோட்டாக் கசிவு' அல்லது 'அயோட்டா இயலாமை' நேர்ந்துள்ளதாகக் கூறப்படும். ஈரிதழ்க் கசிவைப் போலவே, அயோட்டாக் கசிவும் ஒய்வாலும் மருந்தாலும் தணிக்கப்படும். எனினும் நோயரின் பாடு மிகுந்தால் வால்வு மாற்றுப் பண்டுவத்தால் நோயுற்ற வால்வு மாற்றப்படும்.

ஈரிதழ் அல்லது அயோட்டா வால்வு மாற்றம், சில ஏதங்களை உள்ளடக்கிய பெரும் அறுவைப் பண்டுவம் ஆகும். இயற்கையான வால்வை ஒத்தஏடலிக(13)வால்வை மாந்தன் இன்னும் உருவாக்க இயலாததே ஏதத்துக்கான முக்கிய காரணம்.

வால்வு மாற்றத்துக்கு நெஞ்சுக் குலையைத் துளைக்கும் அறுவை தேவை. இதில் அரத்த ஓட்டத்தைக், குலை-நுரையீரல் எந்திரம் மேற்கொள்கிறது இதன் உதவியால் பண்டுவர் நெஞ்சுக்குலையை நிறுத்தி, அதனைத் துளைத்து நோயுற்ற (14) வால்வை நுட்பமாய் நோக்கி, அதனை அகற்றிச் செயற்கை வால்வைப் பொருத்துகிறார்.

வால்வுமாற்றத்துக்குப்பொறி வால்வையோ அன்றித்திசு வால்வையோ பண்டுவர் தேரலாம். பொறி வால்வு, 'கூண்டுள் பந்து' அமைப்பால் ஆன 'தட்டு வால்வு' ஆகவோ இருக்கலாம். 'டக்ரான்' (15)துணி பொதிந்த டைட்டேனியம்(16)கூண்டுள்,சிலிக்கோன் 17 தொய்வப் (ரப்பர்) பந்து அல்லது ஞெகிழித் (பிளாசுடிக்) 18 தட்டுள் உள்ள அமைப்பால் ஆனவை, இந்த வால்வுகள். இந்தப் பொறி வால்வுகள் உடம்புத் திசுக்களுக்குப் புறம்பானவை. இந்த வால்வுகள் மீது குருதி உறையக்கூடும். எனவே இந்த அறுவைப் பண்டுவத்தின் பின்னர், அரத்த உறைவாக்கத்தைத் தடுக்க தக்க மருந்துகளை நோயருக்குக் கொடுப்பார்கள்.

அரத்த உறைவாக்கத்தைத் தடுக்க, திசுவால்வுகள் உருவாக்கப்பட்டன. இறந்த மாந்தர், பன்றி, கன்று போன்ற விலங்கு

களில் இருந்து இந்தத் திசுவால்வை எடுக்கலாம். திசுவால்வுகளும் சிக்கலற்றவையல்ல. அவை சிதைந்து கசியக்கூடும்.

வால்வு மாற்றப் பண்டுவத்துக்கான ஏடலிக வால்வு இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், கசியும் வால்வாலோ அன்றிக் கேடாகப் பழுதுற்ற வால்வு அடைப்பாலோ நெஞ்சுவலி, மூச்சுத் திணறல், முதலிய சிக்கல்கள் உள்ளபோது வால்வு மாற்றப் பண்டுவம் நோயரின் துயரைப் பல ஆண்டுகளுக்குக் கணிசமாகத் தணிக்கும். இத்தகைய அறுவைப்பண்டுவத்துக்கான நோயர்கள், அவர்களின் துயர், மார்பு ராண்ட்சன் (X-) கதிர்ப்படம், குலை மின்வரைவிக்(19) காண்பு, குலை எதிரொலிவரைவி (20) முடிவு முதலானவற்றின் அடிப்படையில் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வால்வுகளின் தாக்குதல் அளவையும், நெஞ்சுக்குலை இயக்கத்தைப்பற்றிய மிகுந்த செய்திகளையும் அறிந்து, அதன்வழி அறுவைப் பண்டுவத்தால் நோயர் எந்த அளவு பயன்பெறுவார் என்பதைக் கணிக்க, சில வேளைகளில், குலைக்குள் சிறு குழாயைச் செலுத்தி அதன்மூலம் செய்திகளைப் பெறும் நெஞ்சுக்குலை நாளவாக்கம் (21) ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

முடக்குக் குலை நோயால் அல்லல்படும் நாயர் பலருக்கு அறுவைப் பண்டுவம் பயன் அளித்தாலும் கூட, வளர்ச்சியுற்ற நாடுகள் தம் முயற்சியால் எய்தியதைப் போல், நமது நாட்டிலிருந்தும் முடக்குக் குலைநோயை அறவே ஒழிப்பதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும். (22)

வறுமை, மக்கள் நெருக்கம், துப்புரவின்மை, அறியாமை ஆகியன நோய்த்தொற்றுக்கு வழிவகுத்து உதவுகிறது. முடக்குக் குலைநோய்க்கு வழிகோலும் தொண்டையழற்சித்தொற்றும், இந்த நோய்த்தொற்றுள் அடங்கியதே! ஊட்டக்குறைவு, அதன்வழி தளர்வுற்ற நோய்த்தடுப்பு, ஆகியன நோய்த்தொற்றை ஊக்குவிக்கும் கூறுகும். இந்த நோக்கில், தமிழக அரசு ஆர்வத்துடன் மேற்கொண்டுள்ள நண்பகல் சாரவுணவுத் திட்டம் முடக்குக் குலைநோய் உள்பட குழந்தை நோய்களைக் குறைக்கக்கூடும்.

காலத்தால் செய்குலையுள் தையல்நம் நல்வாழ்வுக்
காலத்தை நீட்டிக்கும் காண்.

நன்றி: இந்து 6-3-83 தமிழாக்கம்: இல.க. இரத்தினவேல்.

அடிக்குறிப்புகள்

சிற்றூர்களில் குலை, நெஞ்சாங்குலை, தாமரை, நெஞ்சத்தாமரை என்ற சொற்கள் 'இதய'த்தைக் குறிக்கப் பயன்பெறுகின்றன. உட்டுளையுடையது குடைவு. குடை(வு)-Cordia-brudaya என்ற தொடர்பை ஆய்க:

1. Valve வால்வு: திட்டி வாசலைக் குறிக்கும் தமிழ் 'வள்வு'ம் லத்தீன் 'Valve'வும் உறவுடைய சொற்கள். Latin Valva —> English Valve. Latin Valva = leaf of a door.

2. பெருமருத்துவ மனைகளில் நுழையும் குலைநோயரில் கூட 30% முதல் 40% வரை முடக்குக் குலைநோயரே.

3. இந்தியாவில் தொழுநோயர் 32 இலக்கம். நமது பள்ளிக் குழந்தைகளுக்குள்ளே கூட 10000-இல் 56 பேருக்கு முடக்குக் குலைநோயாய் உள்ளது. வளரும் தலைமுறைக் குழந்தையைத் தாக்கி, இளமையில் இயலாமையை ஏற்படுத்திச் சாகடிக்கும் இந்த முடக்குக் குலைநோயைத் தடுக்கும் உணர்வு நமக்கு எழாதது வியப்புக்குரியதே!

4. Surgeon என்பதற்குப் பொருத்தமான தமிழ்ச்சொல் 'பண்டுவர்' இதுவே ஆகுபெயராக Physician-ஐயும் குறிக்கும். Treatment-பண்டுவம் treat-பண்டுவி.

5 : Strepto coccus-நிரற்கோளி: தொடரி (Greek Streptos = Chain) வடிவில் நிரலாய் அமைந்த கோள (Greek- coccus = berry) வகைக் குச்சில் (bocterium)கள். (Refer: Jipmer) annual No. 1972).

6. நெடுநாள் செயல்படும் பென்சாய்த்தின் பெனிசிலின் முடக்குக் காய்ச்சலில் மருத்துவத்தின் நேர்த்திமிக்க வெற்றியாகும்: (பெனிசலின்) பூஞ்சைக் காளானில் இருந்து உருவாக்கப் பட்டது.

7. antibodies: தமிழில் எதிர்மறையைக் குறிக்கும் அல்- அன்- அன்றி, கிரேக்கத்தில் எதிர்ப்பைக் குறிக்க anti-ஆங்கிலத்தில் anti-என்ற முன்னொட்டாக விளங்குகிறது.

8. tissue: தமிழ் 'தச்சு'-லத்தீன் texere, பழைய பிரெஞ்சு tissu ஆங்கிலத்தில் tissue என ஆயிற்று.

9. அர்-சிவப்பு, அரத்தம், குருதி என்பவற்றின் வேர்ப்பொருள் சிவப்பு என்பதே. தமிழ் அரத்தம் சமசுகிருதத்தில் 'ரக்த' என ஆகி மீண்டும் தமிழுக்கு இரத்தம் என வந்தது.

10: aorta: தமிழ் 'ஏர்' (= உயர்த்தல்) என்ற பொருளிலேயே புதிய லத்தின் aorte, கிரேக்கம் aeitein இதிலிருந்து aorta என்ற சொல் உருவாகியது.

11. mitral valve: சமகோணத்தில் பகுக்கப்பட்ட இருகூறுகளின் சந்திப்புக்கு mitre எனப்பெயர். மாவட்டச் சமய முதல்வர் (bishop) அணிந்த அத்தகைய தலைப்பாகையின் வடிவொப்புமை கருதி ஆங்கிலத்தில் mitral valve எனப்பட்டது. mitral stenosis—ஈரிதழ்க்குறுக்கம்.

12. தமிழ் 'துமி' (= வெட்டு), தமிழில் பிளத்தலைக் குறிக்கும் துமி கிரேக்கத்தில் tome என ஆகி, ஆங்கிலத்தில் tomy என்ற பின்னொட்டாக விளங்குகிறது. (எ டு) anatomy. எனவே valvotomy—வால்வுத்துமி. வால்வு: காண்க அடிக்குறிப்பு 1.

13. ideal-ஏடலிக, perfect இலக்கணிய தமிழ் 'ஏடல்' கிரேக்கம், லத்தீனில் ideein, ஆங்கிலத்தில் ideal

14. acute disease – நோய்; chronic disesae — பிணி. எனினும் சொல் எளிமை கருதி நோய், நோயர் என்ற சொற்களே பயன்படுத்தப் பட்டுள்ளன.

15. dacron—வணிக உரிமைப்பெயர். விறைப்பு மிக்க, சுருங்காத விரியாத 'பாலியகடர்' துணி.

16. titaneum-சிலிக்கான், வெள்ளீயத்தை ஒத்த மாழை; வலிமை மிக்கது.

17: silicone-கரிம சிலிக்கான் கூட்டுப்பொருள். இயைபிய, மின்சார உறதித்தன்மை மிக்கது.

18: Plastice-ஞெகிழி, elastic-நீளி.

19, 20, 21; குலைமின்வரைவி-electrocardiogram; குலை எதிரொலி வரைவி (echocardiogram)
catheterization —நாளவாக்கம்.

22. வளரும் நாடுகளில் தணியாத வேகத்தில் வளரும் இந்த நோய், இந்தியாவில் தணியும் அறிகுறியே தென்படவில்லை (Lacet October24, 1981). ஆசியாவில் சிங்கப்பூர்; ஆங்காங் சப்பான் நாடுகளில் முடக்குக் குலைநோய் அறவே ஒழிக்கப் பட்டுவிட்டது. முடக்குக் குலைநோய்க் குழந்தை ஆண்டான 1984-85-இல் நமது நாட்டிலும் இந்த நோயை ஒழிக்கும் முயற்சிகள் போர்க்கால அணுகுமுறைபோல் மேற்கொள்ளப் படவேண்டும்.

இதில் ஒரு வேடிக்கை: முப்பதாண்டுகளுக்குமுன் இந்தியா வில் இந்த நோய் இப்போதைக் காட்டிலும் மிகுதியாய் இருந்த போதிலும், ஏழ்மை காரணமாக மருத்துவமனைக்கு மக்கள் செல்ல இயலாததாலும், மருத்துவர்கள் நோயைக் கணிக்க இயலாததாலும், இந்திய மருத்துவமனைப் பதிவுகளில் இந்த நோய் குறிக்கப்படாததால் இந்தியாவில் இந்த நோய் 'இல்லாதது' இந்தியாவின் நற்பேறு எனத் தவறாகக் கருதப்பட்டது.

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்களைக் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்

புதுச்சேரியா? பாண்டிச்சேரியா?

புலவர். இரா. திருமுருகன், க.பு; கல் மு.

வரலாற்றுச் சான்றுகள்

உரோமனியர்:— வரலாற்றுக் கெட்டாத பழமையுடையது புதுச்சேரி, கி.மு. 200 முதல் புதுச்சேரி, உரோமானியர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தமைக்கு அருகன்மேட்டு அகழ்வாராய்ச்சி, தடயங்கள் பலவற்றைத் தந்திருக்கிறது:

கிரேக்கர்:— கி.பி. 60 இல் 'பெரிப்பிளசு' என்னும் கிரேக்க அறிஞர் இவ்வூரைப் 'பொதுக்கே' என்று குறித்திருக்கிறார், வணிகக் கப்பலோட்டியரின் வழிகாட்டியில் இக்கடற்கரையில் இருந்த மூன்று பெரிய துறைமுகங்களைத் தெற்கிலிருந்து வடக்காகக் காமரா (Camara), பொதுக்கே (Poduca), சோபட்னா (Sopatna) என்று அவர் குறித்திருக்கிறார். இவை முறையே காவிரிப் பூம்பட்டினம், புதுச்சேரி, சோபட்டினம் (மரக்காணம்) ஆகிய ஊர்களைக் குறிக்கும்.

காவிரிப்பூம்பட்டினத்தைக் காமரா என்றும் சோபட்டிணத்தைச் சோபட்னா என்றும் சிதைத்ததைப்போல், புதுச்சேரியைப் பொதுக்கே என்று அவர்கள் சிதைத்து வழங்கியிருக்கலாம்; அல்லது, வரலாற்று அறிஞர் புலவர். மு.த வேலாயுதனார் கருதுவதுபோல 'புது' என்ற வேர்ச்சொல்லுடன் 'கே' என்னும் கிரேக்க மொழிக்குரிய பின்னொட்டினைச் சேர்த்துப் புதுக்கே என்றெழுதிப் புத்தகத்தைப் பொத்தகம் என்று சொல்வதுபோல் புதுக்கேயைப் பொதுக்கே என்று வழங்கியிருக்கலாம்.

கி.பி. 200-இல் தாலமி என்னும் கிரேக்கப் பேரறிஞர் வரைந்த நிலப்படத்தில் பொதுக்கே அல்லது புதுச்சேரி என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. 1.

போர்த்துகீசியர்:-1553-மே திங்களில் நாகப்பட்டினத்திலிருந்து மயிலாப்பூர்க்குக் கடல்வழியே பயணம் செய்த தூய பிரான்சுவாசவியே அடிகளார் பற்றிக் குறிப்பிடும்போது பாரோ என்னும் அறிஞர், போர்த்துகீசியர் வணிக அலுவலகங்கள் வைத்திருந்த சோழமண்டலக் கரைத் துறைமுகங்களின் "பெயர்களைத் தருகின்றார். அவை, நெகப்பட்டம் (Negapatam) அகோர் (Ahor), திரிமினப்பட்டம் (Triminapatam), திரகம்பர் ((Tragambar), திரிமினேசு (Triminauz), கொலொரன் (Coloran), புதுசெய்ரா (Puducheira), காலப்பட்டு (Calapate) கொனேமெய்ரா (Conhemeira), சதரப்பட்டன் (Sadrapatan), மெலியாப் போர் (Meliapor) இவை முறையே நாகப்பட்டினம், நாகூர், திருமலைராயன்பட்டினம், தரங்கம்பாடி, திருமுல்லைவாசல், கொள்ளிடம், புதுச்சேரி, காலாப்பட்டு, கூனிமேடு, சதுரங்கப்பட்டினம், மயிலாப்பூர் ஆகிய ஊர்களைக் குறிக்கும்.

பொத்தகமே, புத்தகம் எனத் திரிந்து வழங்குகிறது என்பர் மொழியாய்வாளர் பாவாணர் —இதழாசிரியர்.

உரோமானியர் பொதுக்கே என்றும், போர்த்துக்கீசியர் புது செய்ரா என்றும் கூறுவதை நோக்கினால் இவற்றின் பொதுவான பழைய வடிவம் ஒன்றிலேயே இவர்கள் தத்தம் மொழிக்கேற்ற வாறு திரித்து வழங்கி இருக்கின்றனர் என்பதும், அப் பழைய வடிவம் புதுச்சேரியே என்பதும் எளிதில் புலனாகும்.

எப்படி வந்தது?: அப்படியானால் இவ்வூர்க்குப் புதுச்சேரி என்ற பெயர் எப்படி வந்தது? புதுச்சேரி என்ற பெயர் எப்படி இந்தப் பழைய ஊரைக் குறிக்கும் என்ற வினாக்கள் எழலாம்?

ஓரின மக்கள் சேர்ந்து வாழும் இடத்தைச் சேரி என்பது பழந்தமிழ் வழக்கு. பள்ளர் வாழும் பகுதி பட்சேரி எனப்படும்.ѣ ஆயர் வாழும் இடம் ஆயர்சேரி, பார்ப்பனர் வாழும் இடம் பார்ப்பனச் சேரி. இவ்வாறே அக்காலத்தில் ஏற்றுமதி, இறக்குமதி மீன் பிடித்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருந்த இக்கடற் கரை மீனவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட சேரி புதுச்சேரி என்று அழைக்கப்பட்டிருக்கல.ாம்.

இக்காலத்திலும் சிற்றூர்களில் புதிதாகக் கட்டப்படும் வீட்டினைப் புது வீடு என்றும் அதற்குரியாரைப் புது வீட்டிக்காரர் என்றும் அழைக்கும் பழக்கம் உண்டு. அ்து எத்தனைப் பழைய தாகப்போனாலும் புதுவீடு என்ற பெயர்மட்டும் மாறுவதில்லை இதுபோலவே காலப்போக்கில் புதிதாக உருவான சேரி புதுச்சேரி என்று பெயர் பெற்றிருக்கலாம் அக்காலத்தில் ஒழுகறை(உழவர் கரை)தான் பெருநகராயிருந்தது. அந்நகரத்தின் துறைமுகமாகக் கடற்கரைப்பகுதியில் விரிந்து புதிதாக உருவான ஊரே புதுச்சேரி துறைமுகம் என்ற அளவில் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட இவ்விடம் பிரஞ்சுக்காரர்கள் காலத்தில்தான் பெருநகராய் விரிவடைந்தது.

புது என்ற பண்படியுடன் உருவான புதுப் பட்டினம், புதுப் பாளையம், புதுப்பேட்டை, புதுக்குப்பம், புதுப்பட்டு, புதுக்குடி, புத்தகரம், புத்தூர், பூதூர் முதலிய ஊர்ப் பெயர்களை இன்றும் எங்கும் காணலாம்; சுந்தரர்க்குப் பெண் கொடுத்த சடங்கவி யாரின் ஊர் புத்தூர் என்று பெரியபுராணம் பேசுகிறது:

தேனிசுக்காரர்;- *1635*-இல் தேனிசுக்காரர்க்கு (Danish) உரிய இருப்பிடம் ஒன்று புதுவையில் இருந்தது. அவர்களால் இவ்வூர் பொலசெரெப் (polesere) என்று அழைக்கப்பட்டது என்பதைப் பியேர் பெரதலோ வரைந்த நிலப்படத்தினால் அறிகின்றோம்.

தச்சுக்காரர்:- தச்சுக்காரர்க்குத் (Dutch) திருப்பாதிரிப்புலி யூரில் வணிக நிலையம் இருந்தமையால் அவர்கள் புதுவையை நன்றாக அறிந்திருந்தனர். அவர்கள் இவ்வூரைப் பொலெசெரெ என்றே அழைத்தனர். தச்சுக்காரர்கள் சிலகாலம் புதுச்சேரியை ஆண்டதாகவும் வரலாறுண்டு *(3)*.

பிரஞ்சுக்காரர்:- ***1654***-இல் சாமிசன் தபுவீல் என்ற பிரஞ்சுக் காரர் அமைத்த நிலப்படத்தில் இவ்வூர் புதெசெய்ரா (Pudeche

lra) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 17-ஆம் நூற்றாண்டின் நடுவில் பிரஞ்சுக்காரர் இதனைப் புதெசேரி Poudecherl) என்றனர். 1664 -இல் அவர்கள் இதனைப் புதிசேரி (Poudicheri) என்று அழைத்தமைக்குச் சான்று உண்டு.

து:-தி ஆனது:-'உ' 'எ' ஆக மாறுவது மேனாட்டார் வழக்கில் காணப்படுவதே. இன்றும் பிரஞ்சுக்காரர்கள் 'வருது' என்னும் பேச்சு வடிவத்தை (Varede) என்றே எழுதுவர். தமிழ் உகரம் மொழி இடை கடைகளில் நிறைந்து ஒலியாமை ஒலியியல் உண்மையாகும். பிரஞ்சு ஒலி முறைப்படி திருப்பாப்புலியூர் என்பது Tiroupapouliour என்று எழுதப்படல் வேண்டும். இது Tirepop eliere என்று எழுதப்பட்டுள்ளது. இதில் மூன்று இடங்களில் வரும் உ-எ என்று மாறி உள்ளமை நோக்கத்தக்கது. இதே அடிப் படையில் அவர்கள் Poudoucheri என்பதனை முதலில் Poude cheri என்று எழுதிப் பின்னர் Poudicheri என்று எழுதினர். கரைக்காலையும் (Carecal) என்று எழுதிய அவர்கள் பின்னர் Karikal என்று மாற்றி விட்டனர். இது அறிஞர் துபிரேய் அவர்களின் கருத்து.(4)

மொழியியல் அடிப்படை:- புதுச்சேரி என்பது இன்றும் பேச்சு வழக்கில் புதிச்சேரி என்று வழங்குகிறது. இதற்கு மொழியியல் அடிப்படையில் காரணம் உண்டு. 'புதிது' என்பதைச் சிலர் 'புதுசு' என்பர். வேறு சிலர் 'புதிசி' என்பர். முதல் வடிவத்தில் 'சு' என்பதில் உள்ள உகரத்தின் ஆற்றலினால் 'து' என்பதன் உகரம் மாறுமல் ஒலிக்கிறது. இரண்டாம் வடிவத்தில் 'சி' என்பதில் உள்ள இகரத்தின் ஆற்றலினால் து-தி யாக மாறி ஒலிக்கிறது. இதனை மொழியியலார் உயிரொலிஇயைபு, (Vowel harmony) என்பர். இதன்படி 'புதுச்சேரி' என்பதன் பேச்சு வழக்கின் இறுதியில் வரும் சே, ரி ஆகியவற்றில் உள்ள இகர ஒலிக் கூற்றின் செல்வாக்கால் து-தியாகப் 'புதிச்சேரி' என்று வழங்குகிறது. எனவே, பேச்சு வழக்கில் கேள்வியுற்ற 'புதுச்சேரி' என்ற வடிவத்தைப் பிரெஞ்சுக்காரர் தொடக்கத்தில் Poudicheri என்று எழுதினர் என்றும் கொள்ளலாம்.

'புதி'-எப்படிப் 'போந்தி' ஆனது?:- 17-ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சு நூற்களில் Poudicheri என்னும் வழக்கு இருந்திருக்கின்றது. இது எப்போது (Pondichery) என்று மாறியது என்பதை அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிருந்த பிரெஞ்சு வணிகர்கள் பிரான்சு நாட்டுடன் கொண்ட மடல் தொடர்பில் இம் மாற்றம் நிகழ்ந்திருக்கக் கூடும்.

u-n ஆனது:- Pou என்பது எப்படி Pon ஆகியிருக்கக்கூடும் என்பதற்குத் துபிரேய் ஓர் எடுத்துக் காட்டுத் தருகிறார். 1664-இல் பெல்சிய Belgique) வணிகர்கள் 16-ஆம் லூய் என்னும் பிரஞ்சு மன்னனுக்கு விடுத்த ஒரு வேண்டுகோளை உரோன்சியேர் என்ற அறிஞர் கண்டெடுத்து அச்சிட்டு வெளியிட்டார். அதனைப் படி எடுக்கையில் Poudichery என்று அதில் இருந்ததை அவர் (Pondi

chery) என்று பிழையாக எழுதிவிட்டார் என்பதே அவர் காட்டுவது. கையெழுத்து வடிவத்தில் 'u' என்பது n ஆகவும் தோன்ற வாய்ப்புள்ளது என்பதைப் பிரெஞ்சு அல்லது ஆங்கிலம் 'அறிந்தவர் அறிவர். ஒருவர் 'u' என்று எழுதியவை மற்றவர் n' ஆகப் பிறழ உணந்த பிழையே Poudi-Pondi ஆனதற்குக் காரணம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

ஆங்கிலேயர்:- Pondichery என்று பிரெஞ்சுக்காரர் வழங்கிய வடிவத்தையே ஆங்கிலேயர்கள் தம் ஒலி முறைப்படிப் பாண்டிச் சேரி' என்று ஒலித்தனர்; Pondicherry என்று எழுதினர்.

இலக்கியச் சான்றுகள்

புதுவை என்றவடிவம்:- கோவன்புத்தூரைக் கோவை என்றும் நெல்வேலியை நெல்லை என்றும் தஞ்சாவூரைத் தஞ்சை என்றும் சுருக்கி வழங்குவது இலக்கணத்தில் மரூஉ என வழங்கப்படும். இம்மரூஉ, இலக்கிய வழக்கிற்கே உரியதாகவுள்ளது. தமிழ் கூறு நல்லுலகத்தில் இன்று மூன்று ஊர்கள் இவ்வாறு மருவி வழங்கிவருகின்றன. அவை புதுச்சேரி, வில்லிபுத்தூர், புதுக்கோட்டை ஆகியன. இந்தப் புதுவை வடிவத்தைப் பிரஞ்சுக்காரர்கள்கூட அரிதாக எடுத்தாண்டுள்ளனர்.(5)

கம்பர் காலம் :- புதுவை என்னும் வழக்குக் கம்பர் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டில் காணப்படுகிறது. கம்பரைக் காத்தளித்த சடையப்ப வள்ளலைப் பாராட்டி ஈழ மன்னன் பரராசசிங்கன் எழுதியனுப்பிய பாடல் ஒன்று இதற்குச் சான்று பகர்கின்றது. சடையப்பனின் தந்தையாகிய சங்கரனும் அவன் முன்னோர்களும் கடற்கரைப் பட்டினமாகிய புதுச்சேரியில் தங்கி இருந்து, கப்பல் வாணிகம் நடத்தியதாக ஈ. எசு. வரதராசர் எழுதுகின்றார். சடையப்பனுக்குப் புதுச்சேரி, திருவெண்ணெய் நல்லூர், வியலூர் ஆகிய இடங்களில் பெருங்காணி நிலங்களிருந்தன என்று அ.கி. நாயுடு குறிப்பிடுகின்றார். புதுவைச் சடையன், புதுவைக் கொடையன், புதுவைத் திரிகர்த்தன் என்று தனிப் பாடல்களில் அவனுக்குத் தரப்படும் அடைமொழிகள் இதற்கு அரண் செய்கின்றன (6) 'இரவு நண்பகல்' எனத் தொடங்கும் மேற்குறித்த பாடலில்

> தருஉயர்த்திடு புதுவையம்பதி தங்குமானிய சேகரன்
> சங்கரன் தரு சடையன் என்றொரு தரும தேவதை வாழவே

என்ற பகுதி புதுவை என்னும் பெயர்க்கு மிகப்பழைய சான்றாகத் தோன்றுகிறது.

ஆனந்தரங்கர் காலம் :- புதுவைக்குப் புகழ்சேர்த்த பெருந்தகை ஆனந்தரங்கர் 18-ஆம் நூற்றாண்டில் எழுதிய தம் நாட்குறிப்பில் புதுச்சேரி, புதுவை என்ற பெயர்களை மிகப்பல இடங்களில் ஆளுகின்றார்.

தற்காலம் :- வண்ணப் பாவலர் தண்டபாணியடிகள், திரிசிர புரம் மீனாட்சிசுந்தரனார், இராமலிங்க வள்ளலார், இராமானுச

நாவலர், பு. அ. பெரியசாமி, பங்காரு முதலிய எண்ணற்ற புலவர் பெருந்தகைகள் இவ்வூரைப் புதுச்சேரி, புதுவை என்னும் பெயர்களாலேயே போற்றி எழுதியுள்ளனர். 12-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் முதல் 20-ஆம் நூற்றாண்டுப் பாவேந்தரை உள்ளிட்ட புலவர்கள்வரையில் எவரும் பொந்திசேரி, பாண்டிச்சேரி, பாண்டி என்ற பிழை வடிவங்களைத் தம் எழுத்துகளில் ஓரிடத்தேனும் எடுத்தாண்டதில்லை.

பிற சான்றுகள்

அயலவர் போற்றிய தமிழ்ப் புதுச்சேரி :- செஞ்சியில் கண்டெடுக்கப்பட்ட பிரெஞ்சுக்காரர்களின் செப்புக்காசுகளில் புதுச்சேரி என்ற தமிழ்ப் பெயர் காணப்படுகின்றது. பிரெஞ்சுக்காரர்கள் அச்சிட்ட 50, 5, 1 உருவாப் பணத்தாள்களில் தமிழில் புதுச்சேரிப் பெயரே இருந்ததை இப்பகுதி மக்கள் இன்னும் மறந்திருக்கமாட்டார்கள்.

பிரெஞ்சுக்காரர்கள் தம் மொழியில் எழுதும்போது Pondichery என்ற வடிவத்தை மேற்கொண்டாலும், தமிழில் எழுதும் இடங்களில் புதுச்சேரி என்ற வடிவத்தையே போற்றிக் குறித்தமை குறிப்பிடத்தக்கது; ஆழ்ந்து எண்ணிப்பார்க்கத்தக்கது.

சேரி ஒழிப்பு :- அயலார் ஆட்சிக்காலத்திலன்றிப் புதுச்சேரி விடுதலைப் பெற்ற பிறகுதான் பாண்டிச்சேரி என்பது பெருவழக்காகிவிட்டது. சேரி என்பது இக்காலத்தில் சிற்றூர்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் இடத்தைக் குறிக்கின்றது. எனவே, நாகரிகம் முற்றிய இந்நகரத்தில் வாழ்வோர் சிலர் தங்கள் ஊர்ப்பெயருடன் 'சேரி'யைச் சேர்த்துக் கொள்வதில் அருவருப்புக் கொள்கின்றனர். இதன் விளைவாகச் 'சேரி'யைத் தீர்த்துக்கட்டிவிட்டுச் 'செல்லமாகப் 'பாண்டி' என்று செப்புகின்றனர்.

பாண்டியனும் பாண்டியும் :— இவ்வரலாற்றுண்மைகளை அறியும் வாய்ப்பில்லாத நம்மவர்கள், பாண்டி என்பது எவ்வகையிலோ பாண்டியனோடு தொடர்புடைய ஊராக இருக்கவேண்டும் என்று நம்புகின்றனர். 'பாண்டி' என்ற வடிவம் ஒலியும் அதனைத் தனித் தமிழ்ச்சொல் என்று நினைக்கச்செய்வதில் வியப்பில்லை. புதுவையில் வந்து பாட்டரங்கேறும் பாவலர்கள், இதனைப் 'பாண்டியன் ஆண்டிருந்த பாண்டித் திருநகரம்' என்றும் 'பாரதிதாசனைத் தந்த தமிழ்ப் பாண்டி' என்றும் கொஞ்சமும் கூச்சமின்றிக் கொஞ்சு தமிழிற்பாடி மகிழ்கின்றார்கள்.

வானொலி நிலையத்தில் 'பாண்டிச்சேரி' :- 1967-இல் இங்கு அமைக்கப்பட்ட வானொலி நிலையம் பாண்டிச்சேரி வானொலி நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டது. தில்லித் தலைமை நிலையத்தில் தமிழ்ச் செய்தி ஒலிபரப்பில் எப்போதும் புதுச்சேரி என்றே கூறிவரும் வானொலி நிறுவனம் தன் ஒரு கிளையில்மட்டும் பாண்டிச்சேரி என வழங்குவதற்குக் காரணம் விளங்கவில்லை.

தொடர்வண்டி நிலறத்தில் 'பாண்டிச்சேரி' :- பல்லாண்டுக் காலமாகப் புதுச்சேரி எனஇருந்த தொடர்வண்டி நிலயப் பெயர்ப் பலகைகூட அண்மையில் பாண்டிச்சேரி என்று 'திருத்தி' எழுதப் பட்டு விட்டது. அயலார் ஆட்சியில் CUDDALORE என்றிருந்த திருப்பாதிரிப் புலியூரின் ஆங்கிலப்பெயர் இன்று TIRUPAPULIUR என்றுமாற்றி எழுதப்பட்டுள்ளது. அப்போது PORTONOVO என்றிருந்த பரங்கிப்பேட்டையின் ஆங்கிலப் பெயர் இன்று PARANGIPETAI என்று தமிழ்ஒலிப்படி மாற்றி எழுதப் பட்டுள்ளது. இதுபோல் இங்கே PONDICHERRY என்று இருந்ததை இன்று PUDUCHERY என்றுதானே மாற்றி எழுதியிருக்கவேண்டும். இல்லை; அதற்கு நேர்மாறாக எற்கனவே இருந்த புதுச்சேரி என்ற தமிழ்ப் பெயரும் பாண்டிச்சேரி ஆக்கப்பட்டு விட்டது! அயலார் ஆட்சியில் கூட இது நடக்கவில்லை என்பது நம் ஆழ்ந்த எண்ணத்துக்குரியது. சிலகாலத்துக்குமுன் தொடர் வண்டிப் பயணச்சீட்டில் இருந்த தமிழ்ப் புதுச்சேரியின் இடத்தைக் கூட இப்போது பாண்டிச்சேரி பறித்துக் கொண்டு விட்டது.

பேருந்துகளில் 'பாண்டி':- வெளியூர்க்குச் சென்றுவரும் பேருந்துகளில் 'பாண்டி' என்ற பெயரே கொட்டை எழுத்துகளில் குடியிருக்கின்றது. சென்னைப் பேருந்துகளில் இப்போது 'மதராஸ்' மறைந்துவிட்டது. அவ்விடத்தில் 'சென்னை' சிறப்பாக விளங்குகிறது. சென்னை -பாண்டிச்சேரி என்று பெயர் தாங்கிவரும் திருவள்ளுவர்கள் இனியேனும் புதுவை மக்களை எண்ணச்செய்வார்கள் என்று நம்பலாம்.

வியப்பிலும் பெரிய வியப்பு:- உரோமானியர், கிரேக்கர், போர்த்துக் கீசியர், தேனிசுக்காரர், தச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய அயலவரோடு தொடர்பு கொண்டிருந்த புதுச்சேரியின் பெயர் அவரவர் மொழியியல்புக்கேற்பத் திரிந்து வழங்கியதில் வியப்பேதுமில்லை. ஆனால், தமிழர் வழக்கில் என்றுமே 'புதுச்சேரி' என்பது இறவாமலிருக்கவும். அதனை ஒதுக்கிப் 'பாண்டி' என்று வழங்குவதையே இற்றைத் 'தமிழர்' சிலர் உயர் மதிப்பாகக் கருதுவது வியப்பிலும் பெரிய வியப்பு.

மண்ணின்மைந்தர்களின் கடமை :- அயலார் பலருக்கு நாம் மாறிமாறி அடிமை செய்தோம் என்பதை உலகறியச் செய்து கொண்டிருக்கும் 'பாண்டி' என்றபெயர் ஓர் அடிமைக்குறியீடு. அதனை நாம் காணவும் நாணவேண்டும். கூறவும் கூசவேண்டும். தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் இனிப் புதுச்சேரி என்ற பெயரே எங்கும் எழுதப் படல்வேண்டும். இது மானமுள்ள இம்மண்ணின் மைந்தர்களாகிய நமது கடமை.

முத்து வீரியம்

புலவர். தி நா. அறிவுஒளி க.மு.; கல்.மு

இலக்கண நூற்பாவில், மெய்யுணர்வைப் பொருள் நுட்பமாக அமையுமாறு நூற்பாயாத்துள்ளார் முத்துவீரர்:

"மெய் யொடு மேவினும் வேறுபடா உயிர்" (மு.வீ:94)

மொழிவகை:- முத்துவீரர் மொழிவகைகளை எழுவகையாகப் பகுத்தார்.

1. தனிமொழி 2. இணைமொழி 3. துணைமொழி 4. பொதுமொழி 5. தணமொழி 6. கணமொழி 7. கலப்புறுமொழி.

1. பிரிக்கப்படாத தனிமொழியாம். (நிலம், நீர்)
2. பிரிக்கப்படுபவை இணைமொழியாம் (தேரன், ஊரன்)
3. சொற்கள் தொடர்ந்துவருபவை துணைமொழியாம் (மூவர் வந்தார்)
4. இருபொருள் கொள்ளும் பகுப்பிற்குரியவை பொதுமொழி (கங்கை, வேங்கை)
5. பன்மையைக் காட்டுவது கணமொழி (முனிவர்கள்)
6. ஒருமையைக் காட்டுவது தணமொழி (இந்திரன், சந்திரன்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

—புதுச்சேரி, தமிழ் காவற்குழுவினர் வெளியீடு!

அடிக் குறிப்பு :

(1) "Ceci est ratifie par les cartes du savant Grec Ptoleme (deux siecles apres Jesus christ) qui portent le nom de Poduca ou Poudouceri. Ce Poudouceri figure egalement surle Periple de l'Erythree

Histoire de Pondichery de lan 1000 a nos jours par Mme Yvonne Robert Goebele.

(2) ஊரும் பேரும் - பக்கம் - 60 இரா. பி. சேது.

(3) புதுவையும் மணக்குளவிநாயகரும் :
— புலவர். மு. த. வேலாயுதனார் - பக்கம் 16.

(4) Revue Historique de Pondichery Jonveau Dubreuil p. 233

(5) Alors Poudouvai dependait du centre administratif appele Oulouare' — Lettre de Rev. Frere Fauchaux a Mme Goebele.

(6) போர்வேள் சடையன் புதுவையான்.

தமிழ் நாவலர் சரிதை - 9.
'புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு'
செந்தமிழ் - 3. பக்கம் 6.

7. இருதிணையிலுங் கலந்து பொதுவாக வருவது கலப்புறு மொழி (ஆண், பெண்)

இத்தகைய மரபும் தமிழ்ப்புலவரிடை இடைக் காலத்தில் விளங்கியது என்பதை முத்து வீரியம் தெளிவாக்குகிறது.

வடமொழி:- இடைக்காலத்தில் வடமொழியைத் தேவமொழி எனக்கருதுமாறு கருத்து பரப்பப் பெற்றிருந்தது. அந்நாள் மக்கள் மொழியியலை, அறிவியல் நெறியில் எண்ணி, ஆராயக் கல்லாத நிலையையே இஃது காட்டுகிறது.

இன்றுங் கூட வடமொழிக்குத் தெய்வத்தன்மை கூறி ஏய்க்கும் கூட்டம் வளமாக இருந்து வருகிறதென்றால், முத்துவீரிய காலத்தில் இந்நிலை இருந்ததில் வியப்பில்லையன்றோ?

எழுத்ததிகாரத்தில் 125ஆம் நூற்பா முதல் 159ஆம் நூற்பா வரை 34 நூற்பாக்கள் வடமொழிச் சொல்-எழுத்துகள் எவ்வாறு திரிந்து தமிழில் வழங்கலாம் என விளக்கியுள்ளார் முத்துவீரர். இவருக்கு முன்னர் பவணந்தியார், வீர சோழிய ஆசிரியர் புத்த மித்திரர் ஆகியோரும் இத்தகு இலக்கணங்கள் செய்துள்ளனர்.

தமிழ்மொழிக்கு இலக்கணஞ் செய்வார், அதிற் பிறமொழிச் சொற்கள் கலக்க வழி காட்டுவது எவ்வாற்றானும் அறிவியல் நெறிக்குரியதாயில்லை. இவ்வாறு தமிழ்மொழிச் சொற்கள் வட மொழிக் கண் புகுவதற்கு இலக்கணம் வகுத்துள்ளனரா? என அந் நாள் தமிழ் இலக்கணியார் எண்ணாதது ஒருபெருங் குறையேயாகும்.

தொல்காப்பியநெறியை அடியொற்றி இலக்கணம் வகுப்ப தில் முத்துவீரர் ஆர்வமுடையவராயிருந்தமையால், வடசொற் கள் எழுத்துகள் எவ்வெம் மாற்றமுற்று வழங்கவேண்டு மென விரிவாக வகுத்தமை எண்ணற்குரியதே.

பொருளதிகாரம் மிக அருமையான இலக்கணப் பகுதியாகும். தொல்காப்பியம் முதலிய நூல்களின் பொருள் பகுதிகளை நன்கு ஆராய்ந்து தெளிந்த முத்துவீரர் அதன் தீஞ்சாற்றினைத் தமிழ் விருந்தாக வழங்கியுள்ளார்.

செய்யுள் என்பது யாது? என்னும் வினவுக்கு மிகச் சுருங்கிய நறிய விடை நவில்கிறார் ஆசிரியர்.

(5)பல நூல்களையும் கற்றுணர்ந்த வல்லோர் கற்பித்துத் (தாமே புதுவதாகப் படைத்துப்) பாடுவது செய்யுள்' என்கிறார் முத்துவீரர்.

இந்நூற்பாவினை நன்னூலாரைப் பின்பற்றிச் சொல்லதி காரத்துள் முத்துவீரர் அமைத்துள்ளார். ஆயின், இதனை யாப்பதி

---

5 'கற்றுணர் வல்லோர் கற்பித் துரைப்பது
செய்யு ளென்மனார் தெளிந்திசி னோரே.'' (முத்துவீரியம் ; சொல் : 475)

காரத்தில் அமைத்திருப்பின் பொருத்தமாக இருந்திருக்கக் கூடும்.6

இந்நூற்பாவுக்கு இலக்கியமாக முத்துவீரிய உரையாசிரியர்,

"இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள்) என்னும்

அரிய இலக்கியப் பாட்டினை மேற்கோளாகக் காட்டிய திறம் உள்ளத்தை அள்ளுகிறது.

இடமும் பொழுதும்: பொருளதிகாரத்தில் ஐந்திணையொழுக்கத்திற் குரிய ஐந்து நிலப் பகுதிகளை நனிசுருக்கமாக நூற்பா வாக்கியுள்ளார் முத்துவீரர்.

"வரையே வனமே சுரமே மருதந்
திரையே யவையவை சேர்தரும் இடனே" (மு.வீ: 777)

(7)பொழுது இருவகைப்படும். ஒன்று காலம்;இரண்டு பருவம் ஆம். காலம் என்பது பெரும் பொழுது ஆகும்.

ஆறு பெரும் பொழுதுகளில் நிகழும் நிகழ்ச்சிகளை முத்துவீரர் இலக்கியநயமிக விளக்கியுள்ளார்.

(1) "கார் காலத்தில், வாடையடித்தல் - மயில், கேகயம் இந்திரகோபம் தோன்றி மகிழ்தல், அன்னம், கிளி, மயில் அகன்று, வருதல் - காந்தள்: கொன்றை, காயா, பூத்தல்; தாமரை ஏங்குதல் ஆகியவை நிகழும்.

(2) கூதிர்க் காலத்தில், கூதிர்க் காற்று வீசும். கொக்கு அன்னம் சங்கு மகிழ்தல், நீர் தெளிதல், மீனினம் தோன்றுதல், முகில் சூல் கொள்ளல், சிறுசண்பகம் பவளமல்லி மலர்தல், மக்கள் வருந்துதல் ஆகியவை நிகழும்.

(3) முன்பனிக் காலத்தில், கோடைக் காற்று வீசும். கோட்டான், ஆந்தை மகிழும். செவ்வந்தி, மாமரம் மலரும்; இலந்தை பழுக்கும். கரும்பு நெல் முதிரும்.

---

(6) "பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" (நன்னூல்: 268)

இதனுரையில், "எழுத்தாலியன்றது சொல்லாதலின், எழுத்துச் சொல்பொருள் அணியென்னும் நான்கினும் நடப்பதுயாப்பு என்பதாயிற்று' என சங்கர நமச்சிவாயர் கருதுகிறார். இதுவலிந்த அமைதியே.

(7) தமிழர் ஆண்டு தொடக்கம் ஆவணி முதலாகத் தொடங்குவதாகும். அதனை முத்துவீரியம் குறிப்பாயுணர்த்திப் பெரும் பொழுதுக்குரிய திங்கள்களைக் கூறுகிறது:

"அவைதாம்,ஆவணி முதலா ஆடி யீறாக
இரண்டிரண்டாக ஏற்கும் என்ப" (மு.வீ: 780

(ஆவணி புரட்டாசி = கார். ஐப்பசி, கார்த்திகை : கூதிர் மார்கழி, தை = முன்பனி. மாசி, பங்குனி = பின்பனி. சித்திரை வைகாசி = இளவேனில். ஆனி, ஆடி - முதுவேனில்)

(4) பின்பனிக் காலத்தில் உலவைக் காற்றடிக்கும். காட்டுக் கோழி புறு மகிழும்; இலவம் கோங்கம் மலரும்; பேரீந்து, பனை பழுக்கும்.

(5) இளவேனிற் பருவத்தில், தென்றல் தவழும்; வண்டு குயில் அன்றில் மகிழும்; மாங்கனி உதிரும்; மயில் மகிழ்ந்தாடும்; புன்னை, தாழை மலரும்.

(6) முதுவேனிற் பருவத்தில், பேய்த்தேர் (கானல்) தோன்றும்; கோடைக்காற்று வீசும்; வலியான், காடை, வானம்பாடி மகிழும்; மல்லிகை பாதிரி மலரும். 8

கார் : வாடை யடித்தல் மயில்கே கயப்புள்
இந்திர கோபம் எழுந்தக மகிழ்தல்
அன்னங் கிளி மயில் அகன்று வருதல்
காந்தள் கொன்றை காயா மலர்தல்
கமலம் ஏங்கல் கார்காலக் குரித்தே". (முத்துவீரியம் : 790)

கூதிர் : "கூதிர் உலவை வீசல்கொக் கொடுவால்
அன்னஞ் சங்கு மகிழ்வுறல் உதகந்
தெளிதல் மீனினம் செனித்தல் முகிற்குழாம்
சூற்கொளல் சிறுசண்பகம்பாரி சாதம்
மலர்தல் மானவர் வருந்துதல் கூதிர்க்
காலக் குரிமையாங் காணுங் காலே." (மு.வீ : 791)

முன்பனி : 'கோடை வீசல் கூகையும் ஆந்தையும்
மகிழ்தல் செவ்வந்தி மாமரம் மலர்தல்
இலந்தை பழுத்தல் இக்குநெல் முதிர்தல்
முன்பனிக்கு உரியவாம் மொழியுங் காலே" (மு.வீ : 792)

பின்பனி : வீங்கு உலவைக்கால் வீசல் கான் கோழி
புறவம் மகிழ்தல் பொங்கருங் கோங்கு
மலர்தல் பேரீந்து மடற்பனை பழுத்தல
பின்பனிக்கு உரியவாம் பேசுங் காலே." (மு.வீ : 793)

இளவேனில் : "தென்றல் அடித்தல் தேன் குயிலோடே
அன்றிலும் மகிழ்தல் மாங்கனி உதிர்தல்
மயில் மகிழ்ந் தாடல் மலர்தல் புனலின்
தாழை வசந்தந் தனக்குரித் தாகும்" (மு.வீ : 794)

முதிர்வேனில் : "கானல் தோன்றல் காற்கோடை வீசல்
வலியான் காடை வான்பாடி மகிழ்தல்
மல்லிகை பாதிரி மலர்தலும் பிறவும்
முதிர்வேனிற்கு உரியவாம் மொழியுங் காலே" (மு.வீ : 795)

தொல்காப்பியத்தில் இத்தகைய இயற்கை விளக்கம் இல்லை. முத்துவீரர் தமது ஆராய்ச்சியால் தேர்ந்து தெளிந்து தொல்காப்பிய மரபினுக்கு விளக்கம் போல ஆறுபெரும் பொழுதுகளின் இயற்கை வளனை அறிவியல் ஆய்வாளர் போல யாத்துள்ள திறம் இவரது படைப்புத் திறனுக்கும் இயற்கையாய்வு நுட்ப ஆற்றலுக்கும் எடுத்துக்காட்டாகும்.*

சிறுபொழுது : ஆறு சிறு பொழுதுகளிலும் நிகழும் நிகழ்ச்சி களையும் அழகொழுக முத்துவீரர் மொழிந்துள்ளார் :

(1) மாலைப் பொழுதில் குவளை மலரும், பறவை ஒலிக்கும், சன்றை நினைத்துக் கறவை செல்லும்; தாமரை கூம்பும்.

(2) யாமப் பொழுதில் கோட்டான், சகோரம் முதலிய பறவைகள் மகிழும். கடல்நீர் மிகும்; களவுத் தொழில் நிகழக் கூடும்.

(3) வைகறைப் பொழுதில் விண்மீன் ஒளிமழுங்கும். விடி வெள்ளி முளைக்கும்; கோழி கூவும்.

(4) விடியலில் பறவைகள் விலங்குகள் மகிழும்; தாமரை மலரும்.

(5) நடுப்பகலில் பேய்த் தேர் ஓடும்; சக்கரவாகப் புள் மகிழும்; எருமை நீரில் கிடக்கும்!

இத்தகைய விளக்கம் இலக்கிய ஆசிரியர்கள் எழுதற்குரியது. இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புவதே உண்மை இலக்கணப் புலவர் இயற்கையன்றோ?

---

(9) மாலை நிகழ்ச்சி : "குவளை மலர்தல் குருகினம் ஒலித்தல்
கனறை யுள்ளிக் கறவை போதறல்
வனசம் கூம்பல் மாலைக் குரிய." (மு.வீ:796)

யாமப்பொழுது நிகழ்ச்சி : "கூகை சகோரம் குழுமிஉள் மகிழ்தல்
கடல்நீர் பொங்கல் களவுமேம் படுதல
யாமக் குரிமைய வாகும் என்ப" (மு.வீ: 797)

வைகறை நிகழ்ச்சி : "வைகறைக் குரியவான் மீன்ஒளி மழுங்கல்
வெள்ளி முளைத்தல் வாரணங் கூவுதலே' (மு வீ : 798)

விடியல் நிகழ்ச்சி : "விடியற் குரிய விலங்கு புள்ளினம் முதல்
மகிழ்தல் தாமரை மலர்தலும் ஆகும்"(மு.வீ : 799)

நண்பகல் நிகழ்ச்சி : "கானல் நீர் ஓடல் களிப்புறச் சக்கர
வாகம் எருமை மாடுநீர்க் கிடத்தல்
உச்சிக்கு உரியவராம் உணருங் காலே" (மு.வீ : 800)

---

* கட்டுரையாசிரியர், பாவலரேறு அவர்களின் 'அறுபருவத் திருக்கூத்து' எனும் நூலைக்காணின் இன்னும் வியப்பர்.
— இதழாசிரியர்.

களவுக்குரிய திணைகள் இரண்டாகும். மேலை மலைக்குறிஞ்சித் திணையும், கீழைக் கடல் நெய்தல் திணையும் களவுப் புணர்ச்சிக் குரியவையாகும் என்பர் முத்துவீரர்10

கற்பிற்குரிய திணைகள் இரண்டாகும். நல்ல நிலமாகிய மருதத் திணையும், அழகிய நிலமாகிய முல்லைத் திணையும் கற்பிற் புணர்ச்சிக் குரியவை என்பர் முத்துவீரர்11

புறப்பொருளை மிகச் சுருக்கமாக அமைத்துள்ளார் முத்துவீரர்: பத்தே நூற்பாக்களில் (மு வீ : 819 முதல் 828 வரை) கூறிமுடித்து விட்டார். புறப்பொருளாராய்ச்சி இடைக்காலத்தில் எவ்வளவு குன்றி விட்டது என்பதையே இஃது காட்டுகிறது.

பாடாண்டிணை பற்றி இவர் பாடவில்லை. பொதுவியல் திணையும் இவரால் பாடப் பெறவில்லை.

12அகவொழுக்க வியலுக்கு அடுத்ததாகக் 'களவொழுக்க வியலையும் கற்பொழுக்க வியலையும் 829 ஆம் நூற்பா முதல் 861 ஆம் நூற்பா வரை விரிவாக ஆய்ந்துள்ளார். இப் பகுதியில்தான் திருக்கோவையார் பாடல்கள் இலக்கிய மேற்கோள்களாக ஒவ்வொரு துறைக்கும், கிளவிக்கும் ஆளப்பட்டுள்ளன.

வரைபொருள் பிரிதலை முப்பத்து மூன்று துறைகளாகப் பகுத்து விளக்குகிறார். இது களவொழுக்க வியலில் நேரும் பிரிவாகும்.13

14கற்பொழுக்கவியலில், கற்பிற் பிரிவின் வகை,

"ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற் குற்றுழி பொருட்பிணி பரத்தை யென்று
ஆங்கு அவ்வாறே அவ்வயின் பிரிவே" (மு.வீ : 855)

என்பர் ஆசிரியர்.

ஓதற் பிரிவு நான்கு கூற்று, காவற் பிரிவு இரண்டு கூற்று, பகைதணி வினைப் பிரிவு இரண்டு கூற்று, வேந்தற்கு உற்றுழிப்

(10) "குடவரைக் குறிஞ்சியுங் குணகடல் நெய்தலும்
கடவ தாகும் களவின் நீர் மைக்கே." (மு.வீ : 809)

(11) நன்னில மருதமும் தென்னில முல்லையும்
துன்னிரு கற்பொடு தோன்றும் என்ப" (மு.வீ : 810)

(12) கைகோள் இரண்டு : "அளவில் இன்பத் தைந்திணை மருங்கில்
களவுகற் பெனஇரு கைகோள் வழங்கும்"
(மு.வீ : 892)

(13) முத்துவீரியம் : 352 ஆம் நூற்பா.

(14) 'கற்புஎனின், "பொற்பு அமை சிறப்பிற் கற்பு எனப் படுவ
மகிழ்வும் ஊடலும் ஊடல் உணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவிய தாகும்" - (மு.வீ : 853)

பிரிவு பதினறு கூற்று, பொருள் வயிற் பிரிவு இருபது கூற்று,பரத்தையிற் பிரிவு நாற்பத் தொன்பது கூற்று என வகுத்துள்ளார் முத்துவீரர்!

யாப்பு : யாப்பதிகாரத்தில் தெளிவும் விளக்கமும் அமைந்துள்ளன. செய்திகளைச் சுருங்கக் கூறிப் புரிய வைத்துள்ளார். மனப்பாடஞ் செய்வார்க்கு உறு துணையாக இந் நூற் பாக்கள் உள.

நேரசை, "நெடில் குறில் தனியா நின்றும் ஒற்றடுத்தும்
நடைபெறு நேரசை நால் வகை யானே" என்னும்
தெளிவான நூற்பா செறிவும் விளக்கமும் உடையதன்றோ?

இதே போல் நிரையசை,
"குறிலிணை குறினெடில் தனித்தும் ஒற்றடுத்தும்
நெறிமையின் நான்காய் வரும் நிரை யசையே"
(மு.வீ : 863, 864)

என்னும் நூற்பாவும் முன்னை நூற்பாக்களை விட எளியதும் இனியதுமாகும்.

15. சவலை வெண்பாவுக்கு முத்துவீரர் இலக்கணம் வகுத்துள்ளார். "இரண்டு குறள் வெண்பாவாக ஒரு விகற்பொடு வருவது சவலை வெண்பா" என்பது இவர் கருத்தாகும்.

16. பஃறொடை வெண்பா பல அடிகளான் வரும் என்பார். இது நான்கடிக்கு மேலே ஏழடியிறுதியாக வரும் என்றும், பன்னிரண்டடி வரை வரும் என்றும் பிற யாப்பு நூல்களால் அறிகிறோம். முத்து வீரர் 'பல அடிகள்' எனப் பொதுவாகக் கூறுவது ஆய்வுக் குரியதாகும்.

17. கலிவெண் பாவுக்கு முத்து வீரரே தெளிவான திட்டவட்டமான வரையறை வகுக்கிறார் : "வரையறையின்றிப் பல அடிகளைக் கொண்டு, தனிச்சொல் பெற்றும் பெறாமலும் வெண்டளை பிழையாது வருவது கலிவெண்பா வாகும்" என்பர்.

18. முதனிலை யளபெடை நேர் நேர் என அசை கொள்ளப் படும்; கடை நிலையளபெடை நிரை நேர் என அசை கொள்ளப் படும்.

---

15. "இருகுறள் சவலை பொருவிகற் பாகும்" (மு.வீ : 908)
16. "பாதம் பலவரின் பஃறொடை யாகும்" (மு.வீ : 909)
17. "அடிவரை யின்றித் தனிச்சொற் பெற்றும்
பெறாதும் வருவது கலிவெண் பாவே." (மு.வீ : 910)
18. 'முதனிலை யளபெடை நேர்நேர் ஆம்; கடை
நிலையள பெடைநிரை நேரா குமே" (மு.வீ : 966)
(எ-டு : ஏஎர் சிதைப - முதனிலையளபு.
வழா அலெலாஅ நின் - இறுதி நிலையளபு.)

19. தேமா, புளிமா என்னும் இரண்டு மாச் சீர்களும் கலிப்பாவினுள் வருதல் ஆகாதென வரையறுத்துள்ளார் முத்துவீரர்.

20. கருவிளங் கனி கூவிளங்கனி என்னும் இரு கனிச்சீர்கள் ஆசிரியப்பாவில் பயிலல் ஆகாதாம்.

21. வஞ்சிச்சீர் நான்கும் வெண்பாவிற் கலக்கவே கூடாதாம்.

22. வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் மட்டுமே பயிலும்;வேறுதளைகள் விரவக் கூடாவாம்.

23. தொல்காப்பிய நெறியைப் பின்பற்றி முத்துவீரர், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இடையிசை வண்ணம், ஒழுகிசை வண்ணம், எண்ணு வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம், ஏந்திசை வண்ணம், தூங்கிசை வண்ணம், வகைப்பு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், அளபு வண்ணம், பா வண்ணம், நலிபு வண்ணம், தாவு வண்ணம், ஒரூஉ வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம் சித்திர வண்ணம் ஆகியவற்றுக்கு நூற்பாக்கள் வகுத்துள்ளார்.

யாப்பில் நூற்பா 45 முதல் 54 வரை வியப்பான குற்றங்களைக் கூறுகிறார் முத்துவீரர். இக்காலத்திற்கு ஏலாத இனைய கருத்துகள் தள்ளற் குரியனவாகும். இதே போல் நூற்பா 65 முதல் 76 வரை கூறப்பெறும் வரையறைகளும் தமிழ் மரபுக் குரியவை யாகா. இத்தகு வேண்டாச் சுமைகளை ஏன் இலக்கணத்தில் திணித்தனரோ இலக்கண அறிஞர்!

இலக்கண நூற்பா யாப்பில் ஓசையின்பம் :

முத்துவீரர் நூற்பா யாப்பில் ஒலியின்பம் அமைத்து யாத்துள்ள ஆற்றல் போற்றற் குரியதாகும்.

வெண்கலிப்பாவின் நூற்பாவைக் கற்கும் போது நம் உள்ளம் துள்ளும் படி பாடியுள்ளார்!

' கலித்தளை தட்டுக் கலியொலி விரவியும்
ஈற்றடி சிந்தடி யாய்வரல் வெண்கலிப்
பாவாம் எனப்பெயர் பகரப் படுமே'' (மு.வீ : 943)

முத்துவீரர் சிற்றிலக்கிய வகைகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளமை பாராட்டத்தக்க சிறப்புடையதாகும். சில வகை இலக்கிய வகைகள் இந்நூலில் அன்றி வேறு நூல்களால் அறிதற்கில்லை

19. ''மாச்சீர் கலியுள் வரப்பெறா என்ப.'' (மு.வீ : 967)
20. ''அகவ லிடத்தும் அடையப் பெறாவே'' (மு.வீ : 969)
21. ' வெண்பாவில் வஞ்சி விரவப் பெறாவே (மு.வீ : 972)
22. வெண்பா அயல்தளை விரும்பாது ஒழுகும் (மு.வீ : 973)
23. முத்துவீரர் இருபது வண்ணங்களுக்கு இலக்கணஞ் செய்துள்ளார்.

எனலாம். முத்துவீரரின் இலக்கிய, யாப்பு ஆராய்ச்சியின் நுண் மாண் நுழை புலச் செல்வமாக யாப்பதிகாரம் மிளிர்கிறது 24.

அணியதிகாரம் சொல்லணியியலை முதலிற் கொண்டுள்ளது. தண்டியில் பொருளணியைச் சிறப்பித்து முதலில் அமைத்துள்ளார். இது முத்துவீரர் காலத்தில் சொல்லணிக்கு ஏற்பட்டிருந்த சிறப்பைக் குறிக்கிறது எனலாம்.

மறிநிலைப் பொருளணி, அந்தாதிமடக்கு, அடுக்குமடக்கு, மடக்கு, ஆகியவற்றை விளக்கிச், சித்திர கவிகளை விளக்குகிறார்.

காதை கரப்பு, கரந்துறைச் செய்யுள், வினாவுத்தரம், எழுத்து வருத்தனவணி, எழுத்தழிவணி, மாலைமாற்றணி நிரோட்டகவணி, மாத்திரைச் சுருக்கவணி, மாத்திரை வருத்தனம், திரிபங்கிபணி, திரிபாகியணி,ஒற்றுப் பெயர்த்தல் அணி, பிறிதுபடு பாட்டு ஆகிய பதிமூன்று சித்திர அணிகளுக்கு இலக்கணஞ் செய்துள்ளார்.

---

24. சாதகக் கவி, பிள்ளைத்தமிழ், பரணி, கலம்பகம் அகப் பொருட்கோவை, ஐந்திணைச்செய்யுள், வருக்கக்கோவை, மும்மணிக் கோவை, அங்கமாலை, அட்டமங்கலம், அனுராகமாலை, இரட்டை மணிமாலை, இணைமணிமாலை, நவமணிமாலை, நான்மணிமாலை, நாமமாலை, பலசந்தமாலை, பன்மணிமாலை, மணிமாலை, புகழ்ச்சி மாலை, பெருமகிழ்ச்சிமாலை, வருக்கமாலை, மெய்க்கீர்த்திமாலை, காப்புமாலை, வேனில்மாலை, வசந்தமாலை, தாரகைமாலை, உற்பவ மாலை, தானைமாலை, மும்மணிமாலை, தண்டகமாலை, வெட்சிமாலை, வெற்றிக்கரந்தை, போர்க்கெழுவஞ்சி, வரலாற்றுவஞ்சி, செருக்கள வஞ்சி, காஞ்சிமாலை, நொச்சிமாலை, உழிஞைமாலை, தும்பைமாலை, வாகைமாலை, வாதோரணமஞ்சரி, எண்செய்யுள், தொகைநிலைச் செய்யுள், ஒலியலந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, உலா, உலா மடல், வளமடல், ஒருபாஒருபது, இருபாஇருபது, ஆற்றுப்படை, கண்படைநிலை, பெயரின்னிசை, ஊரின்னிசை, பெயர்நேரிசை, ஊர்நேரிசை, ஊர்வெண்பா, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், அரசன்விருத்தம் நயனப்பத்து, பயோதரப்பத்து, பாதாதிகேசம், கேசாதிபாதம், அலங்காரபஞ்சகம், கைக்கிளை, மங்கலவள்ளை, தூது, நாற்பது, குழமகன், தாண்டகம், பதிகம், சதகம், செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து, புறநிலைவாழ்த்து, பவனிக்காதல், ஊசல், எழுகூற்றி ருக்கை, கடிகைவெண்பா., சின்னப்பூ, விருத்தம், முதுகாஞ்சி, இயன்மொழிவாழ்த்து.

— இங்குக் குறிப்பிடப் பட்டுள்ள பல நூல்கள் தொல் காப்பியத்துடன் வகுக்கப் பெற்ற பல துறைகளில் அடங்கு பவையாகும். சில வகைகள் பேரிலக்கியங்களிற் காணப்படும் உறுப்புகளாக உள. இத்தகு நூல்கள் தமிழ் மொழி, காலந்தோறுங் கொண்ட எண்ணநிலை, கருத்துநிலை, வரலாற்று நிலைகளை உணர உதவுவனவாகும்.

அணி : பொருளணியில் தன்மையணிக்குத் தலைமையிடம் தந்துள்ளமை பாராட்டத்தக்கதே.

'எவ்வகையான பொருளையும் ஆய்ந்து அதனதன் இயல்பை உள்ளவாறு கூறல் தன்மையணி' என்பார்.25 இது பண்புத் தன்மை, பொருள் தன்மை, வினைத் தன்மை, குலத் தன்மை என நான்கு வகைப படுத்தியுள்ளார்.

ஒரு பொருளோடு பிறிதொரு பொருளை ஒப்பிட்டுக் குணம், வினை, பயன் ஆகிய இவற்றில் ஒன்றின் அடிப்படையிலேனும், பலவற்றின் அடிப்படையிலேனும் புணர்ந்து உவமை தோன்றும் அஃது உவமையணியாகும் என்பார் 26

தொல்காப்பியம், தொழிலும் பயனும் வடிவும் நிறனும் என்று சொல்லப்பட்ட நான்கும் உவமையில் புலனாகும் எனக் கூறும்.27

வடிவமும் நிறமும் பண்பில் அடங்குவனவே. ஆதலின், வடிவென்றும் வண்ணமென்றும் தனித்தனிப் பண்பைப் பிரித்தல் வேண்டா எனக் கருதி முத்துவீரர் மூவகையாக உவமையை அடக்கியதிறம் பாராட்டத் தக்கதே. தொல்காப்பியர் கூறுவன அனைத்தையும் கண்மூடிப் போற்றாமல், திறனாய்ந்து தெளியும் இயல்பு முத்துவீரரால் உள்ளமை இதனால் அறியலாம். உவமையில் பதினெட்டு வகைகளை மட்டும் முத்துவீரியம் இலக்கணப் படுத்தியுள்ளது.28

உருவக அணியை விளக்கிப் பத்து வகைகளை இலக்கணப் படுத்தியுள்ளார் ஆசிரியர் 29

---

25. "எவ்வகைப் பொருளும் அடுத்து அதன் இயல்பை
அறைவது தன்மையாம் ஆயுங் காலே." மு.வீ : (115

26. "பண்புந் தொழிலும் பயனும் என்று இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்பின் அஃது உவமை"
(மு.வீ : 1156)

27. "வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்"
(தொல் - உவமை : 1)

28. (1) விரியுவமை. (2) தொகையுவமை (3) இதரேதர வுவமை (4) உண்மையுவமை (5) மறுபொருளுவமை (6) புகழுவமை (7) நிந்தையுவமை (8) நியமவுவமை (9) அநியம உவமை (10) ஐயவுவமை (11) தேற்றவுவமை (12) விபரீதவுவமை (13) வேட்கையுவமை (14) பலபொருளுவமை (15) விகார உவமை (16) மோகவுவமை (17) கூடாவுவமை (18) பொதுநீங்குவமை என்பனவாம்.

29. (1) தொகையுருவகம் (2) விரியுருவகம் (3) தொகைவிரி யுருவகம் (4) இயைபுருவகம் (5) இயைபிலுருவகம் (6) வியனிலை

தன்மையணி முதலாக வாழ்த்தணி ஈறாக எழுபத்திரண்டு அணிகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளார் முத்துவீரர் பல அணிகளுக்குத் தூய செந்தமிழ்ப் பெயர் அமைத்துள்ளார். ஒரு சில வடமொழிப் பெயர்களையும் தமிழ்ப் படுத்தாமை ஏனோ; தெரிய வில்லை.30

செய்யுளணியியலில் செய்யுள் வகைகளை விளக்குகிறார். தொகைநிலைச் செய்யுள் பற்றியும் நூல் தொகுக்கும் நெறி மரபு பற்றியும் கூறியுள்ளார்.

தொடர்நிலைச் செய்யுளைச், (1) சொற்றொடர்நிலைச் செய்யுள் (2) பொருட்டொடர்நிலைச் செய்யுள் என இரு பிரிவாகப் பகுத்துள்ளார்.

பெரும்பாவியம், பாவியம் பற்றி விளக்குகிறார்.

வடமொழி வழிப்பட்டு வைதருப்பம் அதன் வகைகளை விளக்குகிறார். இவர் கௌட நெறியை விளக்கவில்லை.

பொருட்டெளிவு,இன்பம்,புலம் முதலிய தமிழ் மரபுச் செய்திகளை வடமொழிச் செய்திகளுடன் இணைத்துப் பாடியமை ஏனோ புரிய வில்லை.

ஆற்றுநீர், மொழிமாற்று, அடிமறிமாற்று, நிரனிறை, அளைமறியாப்பு, பூட்டுவில், தாப்பிசை, கொண்டு கூட்டு ஆகிய எட்டுப் பொருள் கோளை முத்துவீரர் அணியிலக்கணப் படுத்தியுள்ளார். நன்னூலார் சொல்லில் கூறியுள்ளார், தொல்காப்பியர் பொருளில் அடங்கியுள்ளார். (தொடர்ச்சி 16-ஆம் பக்கம்.)

யுருவகம் (7) உருவகவுருவகம் (8) ஏகாங்க உருவகம் (9) அனேகாங்கவுருவகம் (10) ஏகதேசவுருவகம் என்பனவாம்.

30. 1. பலபடப் புனைவணி 2. மபக்கவணி 3. ஐயவணி 4. எடுத்துக் காட்டுவமை 5. கூடாமையணி 6. தொடர்பின்மையணி 7 தகுதியின்மைபணி 8. தகுதியணி 19.வியப்பணி 10. பெருமையணி 11. சிறுமையணி 12. ஒன்றற்கொன்றுதவியணி 13. சிறப்புநிலையணி 14. முறையிற் படாச்சியணி 15. மாற்றுநிலையணி 16. ஒழித்துக்காட்டணி 17. கூட்டணி 18. எளிதில்முடிபணி 19. இன்பவணி 20. துன்பவணி 21. அகமலர்ச்சியணி 22. இகழ்ச்சியணி 23. வேண்டலணி 24. மறைபணி 25. பொதுமையணி 26. மறையாமையணி 27. உலகவழக்குநவிற்சிபணி 28. வல்லோர் நவிற்சியணி 29. பின்வருநிலையணி 30 முன்னவிலக்கணி 31. வேற்றுப்பொருள்வைப்பணி 32. பூரணித்தோன்றல் 33. பிறபொருள்வைப்பு 34. கூடும்இயற்கை 35. இருமையியற்கை 36. தன்மேம்பாட்டுரையணி; 37. ஒட்புமைக்கூட்டவணி 38. மாறுபடுபுகழ்நிலையணி 39. புகழாப்புகழ்ச்சியணி 40. புணர்நிலையணி 41. வாழ்த்தணி முதலிய தூய தனித் தமிழ்ச் சொற்களாய் உள.

எண்ணி வாழ்ந்துவரும் பெருந்தொகையான மாந்தரிடையே, தமிழ் இனம் முன்னேற வேண்டுமே என்ற விழைவால், தங்களைக் கலங்கரை விளக்காக எண்ணி, தங்கள் கூற்றினை நெஞ்சில் நிறுத்தி, என் செயல்களை என்னால் இயன்றவரை அமைத்து வருகிறேன்.

மிகவும் எளியவர்க்கும், ஏழைகட்கும், அரசின் சலுகையை எவ்வகை வந்தடையச் செய்யலாம் என்ற வகையில் என் சிறு உதவிகள் வாயிலாக, என்னால் அறிந்தவரை வழிகாட்டி வருகிறேன். வாய்ப்புக்கிட்டும் போதெல்லாம் எளியவரிடமும், ஏழை மக்களிடமும் கலப்பில்லாத் தமிழில் உரையாடுவது என்ற உறுதியினையும் நினைவில் நிறுத்தி, அவர்க்குப் புரியதக்க வகையில் உரையாடி, தனித்தமிழ் கொள்கைப்பற்றினை, அவர்கள் அறியாமல் அவர்கள் ஏற்க வழி செய்யும் முயற்சியில் ஈடுபட்டு முன்னேற்றம் கண்டு வருகிறேன்.

இம்முயற்சியில் ஈடுபடச் செய்ததே தங்கள் மேலான தென்மொழித் தொண்டே எனப் பகர்ந்தால் மிகையாகாது. சட்டச் சிக்கல், சட்டச் சிக்கல் எனக்கூறி மக்களுக்கு மிகவும் தேவையான அடிப்படைநிலை ஏந்துகளைக்கூட அமைத்துத்தர நெஞ்சமற்ற அதிகார வல்லாண்மை படைத்த அரசியல் தொண்டர்கள், திரைப்படத்துறையினர், இன்னோரன்னவர்களிடமிருந்து கீழ்மட்டக் குமுகாயத்தை, மேம்படுத்த தங்களது பணி, தொண்டு பல்லாண்டுகட்குத் தொடர்வது தேவையும் விரைவும் ஆகும்.

மக்கள் நலம் கொண்ட, அவர்களின் தேவைகட்காகத் தொடர்வீர் தென்மொழிப் பணியை தொடர்ந்து. அன்புள்ள,

— ஆ: நிலவரசு, ஒட்டன் சத்திரம்.

0: 986: மாண்புயர் ஐயா! வணக்கம். யான் தொடர்ந்து தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்ற நம் தமிழ் இலக்கிய இதழ்களைப் படித்து என் தமிழார்வத்தை வளர்த்துக் கொண்டும், நம் இயக்கத்திற்கு என்னால் இயன்ற மட்டும் தொண்டுபுரியவும் அணியமாயுள்ளேன். 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' இவற்றை நிறுத்துவதுபற்றி என் கருத்து என்னவெனில், இதுபோன்ற தனித்தமிழில் வரக்கூடிய இனநல முன்னேற்றமுடைய இதழ்களை இனிக்காண்பது அரிது. ஆகவே, 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' தொடர்ந்து வரவேண்டும் என்பதே என் அவா. 'தமிழ்நிலமும்' தொடர்ந்து உரிய காலத்தில் வெளியிட்டால், இன்னும் சிறப்பாக அமையும். தமிழினத்துக்குத் தங்களைப் போன்ற ஒரு தலைவர் இனி அமைவாரா என்பதே ஐயம்! ஆகவே, உங்கள் தொண்டில் அயர வேண்டாம். தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து, தமிழின விடிவெள்ளி தோன்ற, தமிழர் மறுமலர்ச்சி பெற என் உயர்வான வாழ்த்துகள்.

— பூண்டி மறவன், அமரர்பூண்டி.

0: 987: பெரும் மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு! வணக்கம் பல. ஐயா சென்ற தென்மொழி இதழ் (சுவடி 19 ஓலை 8-9) கண்ணுற்றேன். அதில் மிகப்பல உள்ளங்களின் வெளிப்பாடுகள், வெளியிடப்பட்டிருந்தன. ஒரு 'பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்', என்பது பழமொழி. தென்மொழியில் வெளிவந்த அஞ்சல்கள் தென்மொழி தமிழ்ச்சிட்டு ஆகிய இரு இதழ்களும் நிறுத்தப்படக்கூடா என்பதை, தெளிவுபடுத்திவிட்டன. இனியும் இச்சிக்கலை வளர்த்தாமல் இதழ்களின் வளர்ச்சிக்கு; இன்னும் சீரிய முறையில் வெளியிடுவதற்கு வேண்டிய வினைகளை ஆற்றுவதே இனித் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய தலையாய பொறுப்பாகும்.

இதில் தங்களின் வினை மிகுதியாகிய இடர்ப்பாடு குறுக்கிடுமாயின், தங்கள் மேற்பார்வையில் தக்கார் ஒருவரை இவற்றிற்கு முகாமையானவராக ஏற்பாடு செய்தல் வேண்டும். தென்மொழிக் குடும்பத்தில் இம்மாதிரியான பொறுப்பேற்பதற்குத் தகுதியானவர்கள் எவ்வளவோ பெயர்கள் இருக்கலாம். அதற்கு வறுமை இருக்காது. இருப்பினும் அதற்குரியவர் மிகுந்த ஆய்வு செய்து தெளிந்தவர்களையே பொறுப்பாக்க வேண்டும். அவர், "வினை வகையால் வேறுகுமாந்தராக" இருந்து விடக்கூடாது.

இனி, பொருள் தட்டுப்பாடு பற்றிக் கூறியிருந்தீர்கள். அதற்குத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு வளர்ச்சிக் கொடை என்ற ஒரு வளர்ச்சித் தொகையைத் தொடங்க வேண்டியதே. இதற்கு எமது பங்காகப் பத்து உருபாக்கள், (16-5-83) விடை 3-ஆம் பக்கலிலேயே அனுப்பிவிட்டேன். இதுபற்றிய விளக்கம் இரு இதழ்களிலும் வெளியிடுவது. ஒவ்வொரு திங்களிலும் தொகை அளித்தவர்கள் பெயர், தொகை ஆகியனவற்றை வெளியிடுவது அவரவர் முடிந்த தொகைகளை அனுப்பி வைக்கட்டும். 'நிதி குறைந்தவர்கள் காசுகள் தாரீர்' என்றானல்லனோ பாரதி. இது தனிப்பட்ட ஒருவருக்கன்று. மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றின் நலத்திற்காக, மேம்பாட்டிற்காக, வலிமை பெறுவதற்காகச் செய்யக்கூடிய ஒரு தொண்டு. அசாம், பஞ்சாபு போன்ற மாநிலங்களில் மேற்கூறியவற்றிற்காக, எவ்வளவோ பேர் எவ்வளவோ ஈகங்களை வலிந்து ஏற்கின்றனர். சிலர் நினைக்கலாம், அத்தகைய நிலை இவண் என்ன ஏற்பட்டுவிட்டது? என்று. ஈண்டும் எவ்வளவோ மொழி, இன, பண்பாட்டு அழிவு வேலைகள் நடைபெற்றுக் கொண்டுதாம் இருக்கின்றன. தமிழன்தான் கண்களை மூடிக்கொண்டு, ஏதும் நடவாதது போல எண்ணிக் கொண்டிருக்கிறான்.

இந்த அழிவு வேலைகள் சிலருக்காவது தெரிய வேண்டுமானால், மொழித்தூய்மை காக்கப்படவேண்டுமானால், இவ்விதழ்கள் நடந்தேயாக வேண்டும். அதற்கு, மொழி, இன, பண்பாட்டு நல்னில் பற்றுள்ளோர், அவற்றைக் காக்க வேண்டும்; தமிழன் தனித்தன்மையை இழந்துவிடக்கூடாது என்று எண்ணும் தன்மான உணர்வுடையோர் செய்யக்கூடிய சிறு உதவி. 'கேட்டினுமுண்டோர் உறுதி கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்' என்பது வள்ளுவம். எனவே, வெறும் வாய்ப்பேச்சையும், தாளில் எழுதுவதையும் வைத்து எவரையும் எடைபோட முடியாது; எந்த வினையையும் ஆற்றவும் இயலாது. இத்தகைய ஒரு சிறு உதவிகளாவது செய்வதன் மூலமாகத்தான், அரிய வினைப்பாடுகளை ஆற்ற அடித்தளமாவது அமைக்க முடியும். உண்மையுள்ளங்கள் எவ்வளவுபேர், யார், யார் என்பதையும் அறிய இயலும் இதழை நிறுத்தக்கூடாது என்றுமட்டும் வேண்டுகோள் விட்டுவிட்டால், பொருள் ஏந்துகள் இல்லையானால் யாது செய்ய இயலும்? இந்த இனத்தைத் தாழ்மைப்படுத்த வேண்டும் முடிந்தால் அழிக்கவும் வேண்டும் என்று திட்டமிட்டு வினையாற்றும் இதழ்கள் இங்கு வளருகின்ற நாளில், இனமேம்பாட்டிற்காகத் தொண்டாற்றிய இதழ்கள் ஆதரவின்றி அழிந்துவிட்டதென்றால், இதைவிடத் தமிழனுடைய தாழ்விற்கு, மானக்கேட்டிற்கு வேறு சான்றும் தேவையா? உணர்வுள்ளங்கள் எண்ணிப் பார்க்கட்டும். அன்பன்,

— புலவர். அறிவுடைநம்பி, மூலனூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)